தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யுமாறு வற்புறுத்த வேண்டாம்



**சென்னை,**

கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யுமாறு எம்.எல்.ஏ.க்கள் வற்புறுத்த வேண்டாம் என கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜூ தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் புதன்கிழமை நடைபெற்ற நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசிய அ. செளந்தரராசன் (மார்க்சிஸ்ட்), எம். ஆறுமுகம் (இந்திய கம்யூனிஸ்ட்) ஆகியோர் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

அதற்குப் பதிலளித்து அமைச்சர் செல்லூர் கே. ராஜூ பேசியது:

கூட்டுறவு வங்கிகள், வைப்புத் தொகைக்கு ஏற்ப கடன் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி விதித்துள்ளது. கூட்டுறவு வங்கிகளுக்கு பல்வேறு சலுகைகளை தமிழக அரசு வழங்கியுள்ளது. கடன்களை தள்ளுபடி செய்யும் நிலையில், கூட்டுறவு வங்கிகளில் கடன்பெற்றால் திரும்பக் கட்டத் தேவையில்லை என்று நிலை உருவாகிவிடும். இதனால் கூட்டுறவு வங்கிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விடும். எனவே, கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யுமாறு உறுப்பினர்கள் வற்புறுத்த வேண்டாம் என்றார்.

**நீலகிரி மாவட்ட விவசாயிகள்-பெண்கள் மேம்பாட்டுக்கு கடன் உதவி**

**சென்னை,**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியின விவசாயிகள் மற்றும் பெண்களின் மேம்பாட்டுக்கென கடன் உதவிகளை முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.


இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:

பாங்க் ஆப் இந்தியாவின் மூலம் தாட்கோ திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 42 பழங்குடியின மக்களுக்கு 50 சதவீத மானியத்தில் வாடகை வாகனங்கள் வாங்கிட ரூ.2.75 கோடி, கோடநாடு பகுதி பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக ஏழு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.20 லட்சம், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 150 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பம்பு செட்டுகள் வாங்க ரூ.45 லட்சம், கோடநாடு பகுதியில் உள்ள 200 வீடுகளுக்கு கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ.40 லட்சம் என மொத்தம் ரூ.3.80 கோடிக்கான கடன் உதவிகளை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்.

கடன் உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கும் அடையாளமாக ஏழு பேருக்கு கடன் உதவிக்கான காசோலைகளை அவர் அளித்தார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் என்.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**குமரியில் வெற்றிலை விலை இருமடங்கு உயர்வு**



**கன்னியாகுமரி,**

கன்னியாகுமரி வெற்றிலை.

கன்னியாகுமரி பகுதியில் கடந்த 6 மாதங்களில் வெற்றிலையின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். கடந்த 2013 செப்டம்பர் மாதம் ஒரு கட்டு வெற்றிலை ரூ. 30-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது ரூ. 60-ஆக உயர்ந்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மலேசியாவைப் பூர்விகமாகக் கொண்ட வெற்றிலை இந்தியா, இந்தோனேசியா நாடுகளில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. தமிழகத்தில் கும்பகோணத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா பகுதிகளிலும், தேனி மாவட்டம் சின்னமனூர், கூடலூர் பகுதிகளிலும், திருச்சி மாவட்டம் தொட்டியம் பகுதிகளிலும், மதுரை மாவட்டம் சோழவந்தானிலும் பணப் பயிராக வெற்றிலை பயிரிடப்படுகிறது.

இங்கு பயிராகும் வெற்றிலை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் தவிர வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெற்றிலை உற்பத்தியாகும் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக பருவமழை பொய்த்து விட்டதால் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். உற்பத்தி பாதிப்பு காரணமாக வெற்றிலை ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் விலை உயர்வு தவிர்க்க முடியாததாகி விட்டதாக குமரி மாவட்ட வெற்றிலை வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர்.

பல்வேறு மருத்துவக் குணங்கள் வாய்ந்த வெற்றிலை கோயில் திருவிழாக்கள், திருமணம் உள்ளிட்ட மங்கள காரியங்களுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. குமரி மாவட்டத்தில் கடந்த கார்த்திகை மாதம் தொடங்கி கோயில் விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள், புதுமனை புகுவிழா தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால் வெற்றிலையின் தேவை அதிகரித்துள்ளது. இதுவும் விலை உயர்வுக்குக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. வெற்றிலையின் தேவை அதிகரித்துள்ளதால் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ரூ. 30-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கட்டு வெற்றிலை படிப்படியாக உயர்ந்து தற்போது ரூ. 60-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

பாரம்பரிய நிகழ்வு: குமரி மாவட்டத்தில் கிராமங்கள் தொடங்கி நகரங்கள் வரை திருமணம், பூப்புனித நீராட்டு உள்ளிட்ட நிகழ்ச்சிக்கு வந்து செல்லும்

விருந்தினர்களுக்கு சாப்பாடு முடிந்ததும் வெற்றிலை, பாக்கு வழங்கப்படுவது பாரம்பரியமாக நடைபெற்று வரும் முக்கிய நிகழ்வாகும்.

மருத்துவ குணங்கள்: வெற்றிலையின் மருத்துவத் தன்மை குறித்து மூலிகை மருத்துவரான கே.எழில் கூறியதாவது:

வெற்றிலைச் சாற்றுடன், துளசி இலையை சாறு சமஅளவு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் சளித்தொல்லை முற்றிலும் அகலும். வெற்றிலையை மெல்வதால் வாய் துர்நாற்றம் அகலும், உமிழ்நீர் பெருகும், நாடி, நரம்பு பலப்படும். வயிற்றுக் கோளாறு நீங்கி ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்யும். மலச்சிக்கல் குணமாகும். நன்கு பசி உண்டாகும். வாய்ப்புண், வயிற்றுப் புண் நீங்கும்.

இது தவிர புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் வெற்றிலைக்கு உண்டு என்பதால் மக்களின் அன்றாட வாழ்வில் வெற்றிலை தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது என்றார் அவர்.

## விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் ஒத்தி வைப்பு

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் கா. பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் எப்போது நடைபெறும் என்பது குறித்த தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வயல்வெளிப் பள்ளி

**காரியாபட்டி,**

கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் திருச்சுழி அருகே

உள்ள முத்துராமலிங்கபுரத்தில் சிறுதானிய உற்பத்தி என்ற தலைப்பில் வயல்வெளிப் பள்ளி நடத்தப்பட்டது.

எதிர்காலத்தில் சிறுதானியங்களின் பங்கு பற்றி திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி உரையாற்றினார்.

சோளம், மக்காச்சோளம், கம்பு, வரகு, குதிரைவாலி, தினை, சாமை மற்றும் பனிவரகு போன்ற பயிர்களின் முக்கியத்துவம், சாகுபடி தொழில்நுட்பங்கள், சிறுதானிய ஊட்டச்சத்து உணவுகள் தயாரித்தல் மற்றும் வியாபார நுட்பங்கள் குறித்து வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ராஜேந்திரன், தீபாகரன், ஜெகதீஸ்வரி, வீரணன், அருண்கிரிதாரி, முத்துராமு, ராமகிருஷ்ணன் ஆகியோர் பயிற்சி வகுப்புகளை நடத்தினர்.

இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## கோவை மாவட்டத்தில் 2 லட்சத்து 41 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு

**கோவை,**

கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள சிறப்பு முகாம் மூலமாக 2 லட்சத்து 41 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட கால்நடை பராமரிப்புத் துறை இலக்கு நிர்ணயித்து, 85 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் மாடு மற்றும் எருமைகளை கோமாரி நோய் தாக்கியதில் பல கால்நடைகள் உயிரிழந்தன. விவசாயிகள் இடையே போதிய விழிப்புணர்வு இல்லாததே கால்நடைகள் இறப்புக்கு காரணமாகக் கருதப்பட்டது.

தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட இலவச பசுக்கள் சில கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தன. இதையடுத்து, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக கோமாரி நோய் பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் வரத் தொடங்கியது. பொதுவாக மாடு மற்றும் எருமைகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய் தடுப்பூசி

போடவேண்டும். முந்தைய காலத்தில் கால்நடைகளுக்கு போதிய அளவில் தடுப்பூசி போடாத காரணத்தால் அதிகளவில் உயிரிழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோயை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 41 ஆயிரம் மாடு மற்றும் எருமைகள் உள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு 2 லட்சத்து 36 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதன் காரணமாக மாவட்டத்தில் கடந்த ஆண்டு 3 மாடுகள் மட்டுமே கோமாரி நோய் பாதிப்பால் உயிரிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக பல்வேறு பகுதியில் உள்ள மாடுகள் லாரிகள் மூலமாக, கோவை வழியாக கேரளத்திற்கு கொண்டு செல்வது வழக்கமாகும்.

அவ்வாறு கொண்டு செல்லப்படும் பாதிக்கப்பட்ட மாடுகள் மூலமாக கோமாரி நோய் பரவ வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கோவை மாவட்டத்தில் மார்ச் 1-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இது குறித்து மண்டல கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் முத்துகோபாலகிருஷ்ணன் கூறியது:

தமிழக அரசின் விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் ஆடுகள் மட்டுமே வழங்கப்படுகிறது. பிற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் பாதிப்பால் உயிரிழக்கும் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாகும்.

தற்போது 6-ஆவது சுற்றாக மாவட்டத்தில் கோமாரி நோய் ஒழிப்பு சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. இதற்காக கால்நடை மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் உதவியாளர் அடங்கிய 85 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் ஒவ்வொரு நாளும் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் கோமாரி நோய் தடுப்பூசி போடவுள்ளனர். ஒவ்வொரு குழுவினரும் ஒரு நாளைக்கு தலா 120 முதல் 150 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடவுள்ளனர். 21 நாள்கள் நடைபெறும் இம்முகாம் மூலமாக

2 லட்சத்து 41 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திற்கும் சிறப்பு முகாமையொட்டி கிராமசபைக் கூட்டம் மூலமாக கால்நடை வளர்ப்போருக்கு தகவல் தெரிவிக்கப்படவுள்ளது. அதேநேரத்தில், கால்நடைகளுக்கு உரிய நேரத்தில் தடுப்பூசி போடும் குழுக்களை அழைத்துச் செல்ல 12 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் 2 லட்சத்து 45 ஆயிரம் தடுப்பூசிகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இது போன்ற தொடர்ச்சியான சிறப்பு முகாம் மூலமாக கோமாரி நோயை முற்றிலுமாக ஒழிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

**மானிய விலை உலர் தீவனக் கிடங்குகள் திறப்பு**

**வேலூர்,**

வேலூர் கால்நடை மருத்துவமனையில் மானிய விலை உலர் தீவன திட்டத்தை ஆட்சியர் இரா.நந்தகோபால் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

கோடை காலத்தில் கால்நடைகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, மாவட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், குடியாத்தம், ராணிப்பேட்டை, சோளிங்கர் ஆகிய 5 ஊர்களில் உலர் தீவன கிடங்குகள் திறக்க அரசு உத்தரவிட்டது. இதற்காக ஒவ்வொரு கிடங்குக்கும் தலா ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கிடங்குகளில் வைக்கோல், சோளம், மக்காச்சோளம் போன்ற உலர் தீவனங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

வேலூர் கால்நடை மருத்துவமனையில் நடைபெற்ற இதன் தொடக்க விழாவில், கால்நடை பராமரிப்புத் துறை வேலூர் மண்டல இணை இயக்குநர் கமலநாதன், துணை இயக்குநர் மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குடியாத்தத்தில்...

குடியாத்தம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற திறப்பு நிகழ்ச்சிக்கு கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் டாக்டர் ஜி. இளங்கோ தலைமை வகித்தார். டாக்டர் ச. செல்வராஜ் வரவேற்றார்.

நகர்மன்றத் தலைவர் அமுதா சிவப்பிரகாசம், அதிமுக ஒன்றியச் செயலர் எஸ். கோதண்டன் ஆகியோர் வைக்கோல் விற்பனையைத் துவக்கி வைத்தனர். கொண்டசமுத்திரம் ஊராட்சி மன்றத் தலைவர் வி. ராமு, எஸ். மோட்டூர் வேளாண்மைக் கூட்டுறவு சங்கத் தலைவர் எஸ்.எல்.எஸ். வனராஜ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எம். சேட்டு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ராணிப்பேட்டையில்...

ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு கால்நடை உதவி இயக்குநர் எம்.விஜயகுமார் தலைமை தாங்கினார். நகர்மன்றத் துணை தலைவர் ஜே.பி.சேகர், நகர கூட்டுறவு வங்கி தலைவர் கே.பி.சந்தோஷம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆற்காடு கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கே.திருநாவுக்கரசு வரவேற்றார். விழாவில் நகர்மன்ற தலைவர் சித்ரா சந்தோஷம் உலர் தீவனங்கள் விநியோகத்தை தொடங்கி வைத்து பேசினார்.

விழாவில் ராணிப்பேட்டை நகர மன்ற உறுப்பினர்கள் கீதாசேகர், மணிமேகலை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கலவை கால்நடை உதவி மருத்துவர் தணிகைவேல் நன்றி கூறினார்.

**ஒருங்கிணைந்த வேளாண் பெருந்திட்ட வளாகம் திறப்பு**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையில் ரூ.1.50 கோடியில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த வேளாண் பெருந்திட்ட வளாகத்தை புதன்கிழமை முதல்வர் ஜெயலலிதா காணொலி மூலம் திறந்து வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பில் 1,668 சதுர மீட்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த வேளாண்மை பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே புதன்கிழமை தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து

வைத்தார். திருவண்ணாமலையில் மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் குத்துவிளக்கேற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் பன்னீர்செல்வம், அக்கண்டராவ், துணை இயக்குநர்கள் கிருஷ்ணராஜ், சந்திரசேகரன், உதவி இயக்குநர் அருள்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

104 ஊழியர்கள் பணிபுரிவர்: ஒருங்கிணைந்த வேளாண் பெருந்திட்ட வளாகத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, விதை சான்றுத் துறை, மாவட்ட நீர்வடி முகமை மற்றும் உழவர் பயிற்சி நிலையம் ஆகியவை செயல்பட உள்ளன.

உழவர் பயிற்சி நிலையம் மூலம் தினமும் 50 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கும் வகையில் 17 தொழில்நுட்பப் பணியாளர்கள், 87 அலுவலகப் பணியாளர்கள் என மொத்தம் 104 ஊழியர்கள் பணிபுரிவார்கள் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார்.

**நெற்பயிரில் களை எடுப்பு: இணை இயக்குநர் ஆய்வு**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் களை எடுக்கும் பணியை வேளாண் இணை இயக்குநர் ஆய்வு செய்தார். திருவண்ணாமலை, வேங்கிக்கால் பகுதியில் விவசாயி அருள் என்பவரின் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வயலில் பவர் வீடர் என்ற களை எடுக்கும் இயந்திரத்தைக் கொண்டு களை எடுக்கும் பணி நடைபெற்றது. இதை திருவண்ணாமலை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வேளாண் உதவி இயக்குநர்கள் உள்ளிட்ட வேளாண்துறை அதிகாரிகள் பலர் ஆய்வின்போது உடன் இருந்தனர்.

**4 இடங்களில் உலர் தீவன விற்பனை மையங்கள் தொடக்கம்**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 இடங்களில் உலர் தீவன (வைக்கோல்) விற்பனை மையங்களை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையைப் போக்க வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் உலர் தீவன விற்பனை மையங்களைத் தொடங்க முதல்வர் ஜெயலலிதா அண்மையில் உத்தரவிட்டார்.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை, போளூர், தண்டரை, கொற்கை ஆகிய 4 இடங்களில் உலர் தீவன விற்பனை மையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டது.

இம் மையங்களுக்குத் தேவையான தீவனங்கள் கால்நடைத் துறை மூலம் சேகரிக்கப்பட்டு, விற்பனை தொடக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் இம் மையங்களில் உலர் தீவனங்களின் விற்பனையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ஒரு விற்பனை மையத்துக்கு ரூ.9 லட்சத்து 77,500 வீதம் 4 மையங்களுக்கு மொத்தம் ரூ.39 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான உலர் தீவனம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இம் மையங்களில் இருந்து கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு மாட்டுக்கு 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு 21 கிலோ உலர் தீவனம் மானிய விலையில் வழங்கப்படும். அதிகபட்சம் ஒரு பயனாளிக்கு 5 கால்நடைகளுக்குத் தேவையான உலர் தீவனம் ஒரு கிலோ ரூ.2 என்ற விலையில் விற்பனை செய்யப்படும். இந்த தீவனத்தைப் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்து தீவன அட்டையைப் பெற வேண்டும். இந்த அட்டையைக் காண்பித்து உலர் தீவன விற்பனை மையங்களில் இருந்து தீவனங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

விழாவில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ராஜேந்திரன், கோட்டாட்சியர் சாந்தா, உதவி இயக்குநர் கே.மணி மற்றும் கால்நடைத் துறை அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### விலை கிடைக்காததால் பறிக்காமல் செடியில் அழுகும் தக்காளி

**தருமபுரி,**

சரியான விலை கிடைக்காததால், தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள தக்காளியை பறிக்காமல் விவசாயிகள் செடியிலேயே விட்டுவிட்டதால் அழுகி வருகின்றன.தருமபுரி மாவட்டத்தில்

தருமபுரி, பாலக்கோடு ஒன்றியங்களில் 1,000 நாற்றுகள் கொண்ட தக்காளிச் செடியை ரூ.300 கொடுத்து வாங்கி வந்து சுமார் 250-க்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது.

ஓர் ஏக்கரில் தக்காளிப் பயிரிட ரூ.20,000 வரை செலவாகிறது. குறைவான தண்ணீர் போதும் என்றாலும், செடி வளரும் பருவத்தில் நீர் அவசியம். இரண்டு நாள்களுக்கு ஒரு முறை தக்காளிச் செடிகளைப் பறித்தாக வேண்டும்.

தற்போது பயிரிடப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளிலும் எதிர்பார்த்ததை விட அதிகளவில் தக்காளி விளைச்சல் கண்டுள்ளது. தக்காளிக்கு கிராக்கி ஏற்படும் காலங்களில் வியாபாரிகள் கிராமங்களுக்கு நேரிடையாகச் சென்று போட்டி போட்டு வாங்குவர். ஆனால், அதிக விளைச்சல் காரணமாக கூடை தக்காளி ரூ.20-க்கும் குறைவாக விலை போவதால் வாங்கிச் செல்ல வியாபாரிகள் யாரும் முன்வரவில்லை.

இதனால், விளைந்துள்ள தக்காளியை பறிக்க ஏற்படும் செலவுக்கு கூட விலைக் கட்டுப்பாடியாகாததால் பறிக்காமல் செடியிலேயே விவசாயிகள் அப்படியே விட்டுள்ளனர். இதனால், கிராமப் பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போர் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்க தக்காளியை பறித்துச் செல்கின்றனர்.

இதுகுறித்து சின்னக்காம்பட்டியைச் சேர்ந்த விவசாயி ரங்கன் கூறியது:

தருமபுரி ஒன்றியத்துக்குள் சின்னக்காம்பட்டி, அதகபாடி, செக்காரப்பட்டி உள்பட சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது.

நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்த நிலையில் விளைச்சல் அதிகமானதால் கூடை ரூ.20-க்கு கூட வாங்க யாரும் முன் வரவில்லை.

தக்காளியைப் பறித்து பேருந்தில் சந்தைக்கு எடுத்துச் செல்ல ஆகும் செலவுக்கு கூட கட்டுப்படியாகாது என்பதால் பறிக்காமல் விட்டு விட்டோம். இதனால், தக்காளி செடியிலேயே அழுகி வருகிறது.

கிராமங்களில் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றுக்கு உணவாகக் கொடுப்பதற்கு அவர்களே நேரிடையாக வந்து பறித்துச் செல்கின்றனர். 20 சென்ட் நிலத்தில் தக்காளி பயிரிட்டதன் மூலம் ரூ.10 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

**தருமபுரியில் பிப்ரவரி 22-இல் சிறுதானிய உணவுத் திருவிழா**

**தருமபுரி,**

தருமபுரியில் வருகிற 22-ஆம் தேதி தளிர்கள், ஐந்திணை ஆகிய அமைப்புகளின் சார்பில் சிறுதானிய உணவுத் திருவிழா நடைபெற உள்ளது.

இதுகுறித்து தளிர்கள், ஐந்திணை அமைப்புகள் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

நவீன கல்வி முறை, மேற்கத்திய கலாசாரம், இயற்கைப் பேரழிவுகள், புவி வெப்பமயமாதல்

ஆகிய அனைத்துக்கும் முக்கிய காரணிகளாக விளங்குவது மாறிவரும் நமது வாழ்க்கை முறையாகும்.

இயற்கை வாழ்வியல் முறையைக் கைவிட்டதாலும், ரசாயனத்துடன் இரண்டற கலந்துவிட்ட வேளாண் முறையைப் பின்பற்றுவதும் மனித உடலில் ஏராளமான உபாதைகள் ஏற்பட முக்கியக் காரணமாக விளங்குகிறது.

நாம் அன்றாட வாழ்வில் உணவுக்காகப் பயன்படுத்தி வரும் அரிசி, கோதுமையைக் காட்டிலும் பன்மடங்கு சத்துகள் நிறைந்த, பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாத சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சாமை போன்றவற்றையே நம் முன்னோர்கள் விளைவித்து, உண்டு ஆரோக்கியமான வாழ்வை வாழ்ந்தனர்.

உணவே மருந்து என்ற நம் முன்னோர்களின் இந்த வாழ்வியல் முறையை விடுத்து மெல்ல மெல்ல அரிசி மீதும், கோதுமை மீதும் மோகம் கொண்டு அதையே மூன்று வேளையும் உள்கொண்டு வருவதே இன்று பரவலாக காணப்படும் பல உடல் உபாதைகளுக்கும், நமது நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்து வருவதற்கும், மண் தன் வளமிழந்து கொண்டிருப்பதற்கும் முக்கியக் காரணம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய முறையை தவிர்த்து மீண்டும் நமது பாரம்பரிய உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வின் ஒரு பகுதியாக வருகிற 22-ஆம் தேதி தருமபுரியில் மாற்று வாழ்வியலுக்கான ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.தருமபுரி மதுராபாய் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள

இந்த நிகழ்ச்சியில் இயற்கை வேளாண் ஆர்வலர்கள் பங்கற்று உரை நிகழ்த்துகின்றனர்.

விழாவின் நிறைவில் ரூ. 150 கட்டணம் அளித்து ஏற்கெனவே நுழைவுச் சீட்டு பெற்றவர்களுக்கு பாரம்பரிய உணவு வகைகளான கொள்ளுச் சாறு, தினை அல்வா, கேழ்வரகு லட்டு, வரகு பகுவடை, சாமை மல்லிச் சோறு, பனிவரகு சாம்பார் சோறு, குதிரை வாலி புட்டு போன்ற உணவு வகைகள் பரிமாறப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோமாரி நோய்த் தடுப்பு முகாம் மார்ச் 1- இல் தொடக்கம்**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டத்தில் வருகிற மார்ச் 1-ஆம் தேதி ஆறாவது கட்ட கோமாரி நோய்த் தடுப்பு முகாம் தொடங்குகிறது.கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் ஆறாவது கட்டமாக வருகிற மார்ச் 1-ஆம் தேதி தொடங்கி 21-ஆம் தேதி வரை கோமாரி நோய்த் தடுப்பு முகாம் நடைபெறுகிறது. இந்த முகாம்களில் அனைத்து பசுக்கள், எருமைகள் உள்ளிட்ட 4 வயதுக்கு மேல் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் நோய்த் தடுப்பு ஊசி செலுத்த வேண்டும்.

மேலும், மாவட்டத்திலுள்ள 251 ஊராட்சிகளிலும் கால்நடைப் பராமரித் துறை, பால் வளத்  துறை, புதுவாழ்வுத் திட்டக் குழு ஆகியவை சார்பில் முகாம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.கூட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) எஸ்.நோகநாதன், பால்வாளம் துணைப் பதிவாளர் தனபால், புதுவாழ்வுத் திட்ட மேலாளர் ஆர்.பத்மாமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தனியார் வேக்சினேட்டர்களால் கோழிப்பண்ணைத் தொழில் பாதிப்பு**

**நாமக்கல்,**

கோழிகளுக்கு தடுப்பூசி போடும் சில தனியார் வேக்சினேட்டர்களால் கோழிப்

பண்ணைத் தொழில் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று, தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து, கோழிகளுக்கு தடுப்பூசிகளை பயன்படுத்துவதில் பண்ணையாளர்கள் விழிப்புடன் செயல்படவும் அறிவுறுத்தியுள்ளது.

கோழி முட்டை, இறைச்சிக்காக நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு, கோவை மாவட்டங்களில் அதிகளவில் பல்லாயிரக்கணக்கான கோழிப் பண்ணைகள் செயல்படுகின்றன. இந்தப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் தடுப்பூசி போடுவது வழக்கம்.

இதற்காக, ஒவ்வொரு பண்ணைகளிலும் தனியாக வேக்சினேட்டர்களை (தடுப்பூசி போடுபவர்) நியமிப்பது இயலாது என்பதால் தனியார் வேக்சினேட்டர்கள் மூலமாகப் பண்ணைக் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

அவ்வாறு வெளியில் இருந்து வரும் தனியார் வேக்சினேட்டர்கள் பண்ணையிலுள்ள அனைத்துத் கோழிகளுக்கும் முழுஅளவில் தடுப்பூசி போடாமலும், தரமான நோய் தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்தாமலும் ஏமாற்றுவதால் கோழிப் பண்ணைகளுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதை விசாரணை அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சம்மேளனத்தின் தலைவர் ஆர்.நல்லதம்பி வெளியிட்ட அறிக்கையில் கூறியது:

விவசாயத் தொழிலுக்கு மாற்றாக கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர் மாவட்டங்களில் கோழிப்பண்ணைத் தொழில் விளங்குகிறது.

தொடக்கத்தில் சுமார் 5,000 சிறு சிறு பண்ணைகளாக நடைபெற்று வந்த இந்தத் தொழிலில் தற்போது சுமார் 1000 பண்ணைகள் மட்டுமே உள்ளன. தீவன விலையேற்றம், ஆள்கள் பற்றாக்குறை, வேறு மாநிலங்களில் ஏற்படும் நோய் தாக்குதலில் முட்டை, இறைச்சி ஏற்றுமதிக்கு விதிக்கப்படும் தடை போன்றவற்றால், பண்ணைகள் குறைய காரணமாக இருந்தாலும் வேக்சினேட்டர்களின் தவறான நடவடிக்கைகளும் பண்ணைகள் குறைய முக்கியக் காரணங்களாகும்.பண்ணையாளர்கள் பொருளாதார சூழ்நிலை, ஆள்கள் பற்றாக்குறை, நேரமின்மை போன்ற காரணங்களால் கோழிகளுக்கு பயன்படுத்தும்

ஊசி, மருந்து போன்றவற்றை வேக்சினேட்டர்கள் மூலமாகவே பயன்படுத்துகின்றனர். இதைச் சாதமாக பயன்படுத்திக் கொள்ளும் சில வேக்சினேட்டர்கள் போலி மருந்துகளை தொடர்ந்து பண்ணைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால், கோழிப் பண்ணைத் தொழிலின் பொருளாதார ரீதியாக நசிந்து வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, இந்தப் பிரச்னைகள் ஏற்படாமல் இருக்க தரமான தடுப்பூசி மருந்துகளை பண்ணையாளர்கள் தங்களது பொறுப்பில் வாங்கி நேரடி கண்காணிப்பில் கோழிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் தென்னங்குருத்து விற்பனை அமோகம்

**நாமக்கல்,**

இளநீர், நுங்கு போன்று நாமக்கல்லில் தற்போது தென்னங்குருத்து விற்பனையும் அமோகமாக நடைபெறுகிறது.

நாமக்கல்லில் கடந்த சில நாள்களாக பகல்நேர வெப்ப அளவு அதிகரித்து வருகிறது. இதையடுத்து, ஆங்காங்கே இளநீர், நுங்கு, வெள்ளரி வியாபாரமும் களைகட்டத் தொடங்கியுள்ளன. இவற்றின் விற்பனைக்கு போட்டியாக தற்போது தென்னங்குருத்துகளின் விற்பனையும் நாமக்கல்லில் ஜோராக நடைபெற்று வருகிறது.

கம்பம் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படும் இந்த தென்னங்குருத்துக்கள் ஒரு துண்டு (சுமார் 50 கிராம்) ரூ.10 என்ற விலையில் விற்கப்படுகிறது. இவை சற்று துவர்ப்புடன் தேங்காயின் சுவையுடன் ஒத்திருக்கின்றன. உடல் சூட்டை தணிக்கவும், நீரழிவு நோய், நீர்கடுப்பு, அல்சர், மஞ்சள் காமாலை, வயிற்றுவலி, அம்மை போன்ற பிரச்னைகளையும் தீர்ப்பதாகக் கூறி விற்கப்படும் இந்த தென்னங்குருத்துக்களை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

தென்னங்குருத்து விற்பனை குறித்து விற்பனையாளரான மதுரைச் சேர்ந்த டேவிட் (45) கூறியது:மதுரை, தேனி, கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் வேறு பயிர் செய்வதற்காக தென்னை மரங்கள் இளங்கன்றிலேயே வெட்டப்படும்.

அவ்வாறு வெட்டப்படும் இளங்கன்றுகளை விலை பேசி அதன் குறுத்தை எடுத்து வந்து விற்பனை செய்கிறோம்.

போக்குவரத்து செலவு உள்பட ஒரு குறுத்துவின் அடக்க விலை ரூ.400 ஆகிறது. ஒரு துண்டு ரூ.10 என்ற விலையில், ஒரு முழு குறுத்து ரூ.500-க்கு விற்கப்படுகிறது. கிராமப்புற மக்களுக்கு தென்னங்குருத்தின் மகத்துவம் தெரியும். நகர மக்களுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை என்றார் அவர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்**

**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்டத்தில் 6-ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணி மார்ச் 1 முதல் 21-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அப்போது மாவட்டம் முழுவதும் 3.50 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் இந்த கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிக்கான ஆயத்தக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நாமக்கல்லில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பால்வளத் துறை, வனத் துறை, ஊராட்சிகள் துறை, புதுவாழ்வுத் திட்டம், கால்நடைப் பராமரிப்புத் துறையினர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பேசியது:

பால்வளத் துறையில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள், கிராம அளவிலான பணியாளர்களை கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கு முழுமையாக ஈடுபடுத்தி 100 சதம் அனைத்துக் கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும்.

வனத் துறை அலுவலர்கள் வனக் கிராம மக்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி கால்நடைகளுக்கு கேமாரி நோய் தடுப்பூசி போட உதவி புரிய வேண்டும். இதேபோல, ஊராட்சிப் பகுதிகளில் இந்த விழிப்புணர்வு பணியை ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

6-ஆவது சுற்று கேமாரி நோய் தடுப்பூசி போடும் பணிக்காக 85 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு, 100 சதம் கேமாரி நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள கால்நடை மருத்துவர்கள் அந்தந்த கிராமங்களுக்கு வந்து காலை 6 முதல் 10 மணிவரை தடுப்பூசி போடுவர்.

எனவே, கால்நடை வளர்ப்போர் தவறாமல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சக்திவேல், துணை இயக்குநர் புருசோத்தமன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உய்யக்கொண்டானில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க ரூ. 2.5 கோடி!**

**திருச்சி,**

உய்யக்கொண்டான் ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் வகையில் ரூ. 2.5 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக, 2014-15 ஆம் ஆண்டுக்கான மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு மத்திய, மாநில அரசுகளிடமிருந்து ரூ. 1.50 கோடி பெறவும், மாநகராட்சி பொது நிதியில் இருந்து ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்து கொள்ளவும் அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, உய்யக்கொண்டான் பாதுகாப்புக் குழுவின் சார்பில் திருச்சியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஆணையர் தண்டபாணி, மாநகரில் 34 இடங்களில் கழிவுநீர் உய்யக்கொண்டானில் கலப்பதாகவும், அந்த இடங்களில் சுத்திகரிப்பு கட்டுமானங்களை அமைத்து கழிவுநீரை சுத்திகரிக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் கூறியது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, ஐயப்பன் கோயில் பகுதியில் உய்யக்கொண்டான் ஆற்றில் கலக்கும் சாக்கடைப் பகுதியிலும், தோப்புத் தெரு பகுதியில் உய்யக்கொண்டான் ஆற்றில் கலக்கும் சாக்கடைப் பகுதியிலும் முதல்கட்டமாக பணிகள் நடைபெறவுள்ளதாக மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

காவிரிக்கு ரூ. 2.5 கோடி!

இதேபோல, காவிரியாற்றில் கழிவுநீர் கலக்கும் பிரதான பகுதியான மேலச்சிந்தாமணி பகுதியில் ரூ. 2.5 கோடியில் சுத்திகரிப்பு அமைப்பு ஏற்படுத்தவும்

நிதிநிலை அறிக்கையில் திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திலும் ரூ. 1.5 கோடி மத்திய, மாநில அரசுகளின் நிதியாகவும், ரூ. 1 கோடி மாநகராட்சி பொது நிதியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரின் பிரதான பகுதிகளின் வழியே செல்லும் ரெட்டை வாய்க்கால்கள் மேலச்சிந்தாமணி பகுதியில் பெரும் கழிவுநீர்க் கால்வாயாக காவிரியில் கலப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு திட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்பட்டால் நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பது பெருமளவில் தடுக்கப்படும்.

**அரியலூரில் நாளைவிவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**அரியலூர்,**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (பிப். 21) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குப் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் குறைதீர் மன்றத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனம், வேளாண் கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்ட முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் குறைகளை தெரிவிக்கலாம்.

**ரூ. 40 லட்சத்தில் உலர் தீவன கிடங்குகள்**

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை உலர் தீவன கிடங்குகள் அமைக்க ரூ. 40 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூரில் அண்மையில் நடைபெற்ற மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் விழா, தீவன கிடங்குகள் திறப்பு விழாவில் அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இரண்டு பருவமழையும் பொய்த்துப் போனதால், சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரமான கால்நடைகளின் தீவன பற்றாக்குறையைப் போக்க மானிய விலையில் தீவனத்தை கிடங்குகளின் மூலம் வழங்க தமிழக முதல்வர் ரூ. 12.50 கோடியை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் வறட்சி நிவாரணத் திட்டத்தில் அரியலூர், கீழப்பழூர், ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய 4 இடங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்க ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ ரூ. 2 வீதம் மானிய விலையில் ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை, இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு இந்த உலர் தீவனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் தங்களது குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு, கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை அருகேயுள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்தவர்களுக்கு கால்நடை தீவனம் வழங்கும் அட்டை வழங்கப்படும்.

அந்த அட்டையை காண்பித்து விவசாயிகள் கால்நடை தீவன கிடங்கில் மானிய விலையில் வைக்கோல் பெற்றுக் கொள்ளலாம். அரியலூர் கால்நடை மருத்துவமனையில் அமையும் தீவன கிடங்கு மூலம் அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 37 ஊராட்சிகள், அரியலூர் நகராட்சிப் பகுதியில் உள்ள கால்நடைகள் பயன்பெற உள்ளன.

கீழப்பழூர் கால்நடை மருந்தகத்தில் அமைய உள்ள தீவன கிடங்கு மூலம் திருமானூர் ஒன்றியத்தின் 36 ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் பயன்பெற உள்ளன. ஆண்டிமடம் கால்நடை மருந்தக வளாகத்தில் அமைய உள்ள தீவன கிடங்கு மூலம் செந்துறை ஒன்றியத்தின் 30 ஊராட்சிகளும், ஆண்டிமடம் ஒன்றியத்தின் 30 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சியில் உள்ள கால்நடைகள்

பயன்பெற உள்ளன. தா.பழூர் கால்நடை மருந்தக வளாகத்தில் அமையும் தீவன கிடங்கு மூலம் ஜயங்கொண்டம் ஒன்றியத்தில் 35 ஊராட்சிகளும், இரு பேரூராட்சிகளும், தா.பழூர் ஒன்றியத்தில் 33 ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் என அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 1,62,461 கால்நடைகள் பயன்பெற உள்ளன என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவை உறுப்பினர் துரை. மணிவேல் முன்னிலை வகித்தார். இதில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சந்திரசேகரன், உதவி இயக்குநர்கள் பாஸ்கர், மருதைராஜ், கால்நடை மருத்துவர்கள் வரதராஜன், ஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திருவரங்குளத்தில் விளைபொருள் குழுக்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி புதுக்கோட்டை,

புதுக்கோட்டை அருகே திருவரங்குளம் வேளாண் வணிக மையத்தில் விளைபொருள் குழுக்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் சார்பில் ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சிக்கு புதுக்கோட்டை வேளாண் வணிக துணை இயக்குநர் நா. அண்ணாமலை தலைமை வகித்து, விளைபொருள் குழு செயலாக்க நடவடிக்கைகள், குழுக்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள், குழுக்களின் செயல்திறன் மேம்பாடு ஆகியவை பற்றி பேசினார்.

நபார்டு வங்கியின் பொது மேலாளர் எஸ். நடராஜன், உதவி பொது மேலாளர் எஸ். சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு, விளைபொருள் குழுக்களின் சேமிப்பு முக்கியத்துவம் குறித்தும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் கலந்துகொண்டு, கால்நடை பராமரிப்பு மற்றும் குழுக்கள் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும், குடுமியான்மலை உழவர்பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் வி. சாந்தி, உயர்சந்தை விலை கிடைத்திட

குழுக்களுக்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் விற்பனை வசதிகளை பயன்படுத்துவது குறித்தும் பேசினர்.

இதில் புதுக்கோட்டை விற்பனைக்குழுச் செயலர் கெப்சல்யாமோகன், ஆத்மா மாவட்ட இணைப்பு அலுவலர் ஆர். ஜெகதீஸ்வரி, விதை ஆய்வாளர் பாண்டி, விற்பனைக்குழு மேலாளர் செந்தில்பாண்டியன் ஆகியோரும் கலந்துதகொண்டு பயிற்சியளித்தனர்.

இதில், வத்தனாகுறிச்சி, ஒடுக்கூர் கறவைமாடு விளைபொருள் குழுக்கள், முல்லைநகர், இளஞ்சாவூர், வாழக்குறிச்சி உளுந்து விளைபொருள் குழுக்கள், எம். குளவாய்ப்பட்டி, இளஞ்சாவூர் மக்காச்சோளம் விளைபொருள் குழுக்கள், திருநார் நிலக்கடலை விளைபொருள் குழு, தோப்புப்பட்டி கறவை மாடு விளைபொருள் குழு உள்ளிட்ட 75 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

மேலும் 9 குழுக்களுக்கு பொது பதிவேடு, தீர்மானப் பதிவேடு, ரொக்கப் பதிவேடு, கடன் பதிவேடு, சேமிப்பு பதிவேடு, சுழல்நிதியாக ரூ. 20 ஆயிரமும், ஊக்கத்தொகை ரூ. 20 ஆயிரமும் வழங்கப்பட்டது.

## மானிய விலையில் வைக்கோல் விற்பனை தொடக்கம்

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள உலர் தீவனக் கிடங்கில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் மானிய விலையில் வைக்கோல் விற்பனை புதன்கிழமை தொடக்கி வைக்கப்பட்டது.

இந்த மையத்தைத் தொடக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் பின்னர் தெரிவித்தது:

தமிழகத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் உலர் தீவன தட்டுப்பாட்டை போக்குவதற்காகத் தமிழக முதல்வர் தமிழ்நாடு முழுவதும் 125 உலர் தீவன கிடங்குகளை அமைக்க உத்தரவிட்டார். ஒவ்வொரு கிடங்குக்கு தலா ரூ. 10 லட்சம் வீதம் நிதி ஒதுக்கப்பட்டு, வைக்கோல் கொள்முதல் செய்யப்படும்.

கொள்முதல் செய்யப்படும் வைக்கோல் விவசாயிகளுக்கு மானிய விலையில் கிலோ ரூ. 2-க்கு விற்பனை செய்யப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு

மாட்டுக்கு 3 கிலோ வீதம் 5 மாடுகள் வரை வழங்கப்படும். ஐந்து மாடுகள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு வாரத்துக்கு 105 கிலோ வைக்கோல் வழங்கப்படும்.

மாவட்டத்தில் 6 உலர் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் கோட்டத்தில் வல்லம், செங்கிப்பட்டி கால்நடை மருந்தகங்களிலும், கும்பகோணம் கோட்டத்தில் திருப்பனந்தாள், பாபநாசம் கால்நடை மருந்தகங்களிலும், பட்டுக்கோட்டை கோட்டத்தில் குருவிக்கரம்பை கால்நடை மருந்தகம், உதவி இயக்குநர் அலுவலக வளாகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

அரசு ஆணைப்படி தற்சமயம் சாக்கோட்டை அரசு விதை பண்ணையிலிருந்து உலர் தீவனம் கிலோ ரூ. 8.57-க்கு கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 2-க்கு வழங்கப்படவுள்ளது.

உலர் தீவனத்துக்கு விண்ணப்பித்துள்ள கால்நடை உரிமையாளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய தீவன அடையாள அட்டை வழங்கப்படும். தீவன அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் வாரம்தோறும் மானிய விலையில் உலர் தீவனம் பெற்றுக் கொண்டு பயனடையலாம் என்றார் ஆட்சியர்.

மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், மாவட்ட பால் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆர். காந்தி, மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் துரை. திருஞானம், வல்லம் பேரூராட்சித் தலைவர் சிங். ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மீன் பிடிக்க பயன்படுத்தப்பட்ட சுருக்குமடி வலை பறிமுதல்**

**நாகப்பட்டினம்,**

நாகை அருகே செவ்வாய்க்கிழமை இரவு மீன் பிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலையை  கடலோரக் காவல் படையினர் பறிமுதல் செய்தனர்.

கடலோரக் காவல் படை ஐ.ஜி சொக்கலிங்கம், கடலோரக் காவல் படை காவல் கண்காணிப்பாளர் மனோகரன் ஆகியோர் தலைமையில், கடலோரக் காவல் படை

போலீஸார் செவ்வாய்க்கிழமை இரவு நாகை அருகே கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, நாகை மாவட்டம், பூம்புகாரைச் சேர்ந்த மீனவர்கள் 31 பேர் ஒரு விசைப் படகு மற்றும் 5 பைபர் படகுகள் மூலம், அரசால் தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலையைப் பயன்படுத்தி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்து தெரியவந்தது.

இதையடுத்து, மீனவர்கள் பயன்படுத்திய சுருக்குமடி வலையைப் பறிமுதல் செய்த கடலோரக் காவல் படை போலீஸார், மீனவர்கள் 31 பேரையும், அவர்களின் படகுகள் மற்றும் சுருக்குமடி வலைகளை நாகை மீன்வளத் துறையினரிடம் புதன்கிழமை ஒப்படைத்தனர். சுருக்குமடி வலையைப் பயன்படுத்த அரசு தடைவிதித்து வெளியிட்ட அரசாணைப்படி, மீனவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் நாகை மீன்வளத் துறை இணை இயக்குநர் சுப்புராஜ்.

### வலங்கைமான் பகுதியில் 9 இடங்களில் தடுப்பணைகள்

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் வெண்ணாறு, பாமணியாறு, அரசலாற்றில் 9 இடங்களில் நீர்மூழ்கித் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

நீடாமங்கலம் அருகே சித்தன்வாழூர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நீர்மூழ்கி தடுப்பணையை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

மாவட்டத்தில் கடந்த ஆண்டு வெண்ணாறு மூணாறு தலைப்பு, ஒளிமதி, பாலையூர், வடுகக்குடி உள்ளிட்ட 5 இடங்களில் நீர்மூழ்கித் தடுப்பணைகள் அமைக்கப்பட்டன. இதனால் சுமார் 15 மீட்டர் வரை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது.

நிகழாண்டு வலங்கைமான் பகுதியில் சித்தன்வாழூர், சாரனந்தம், கமுககுடி, குடவாசல் பகுதியில் கூந்தலூர், சரபோஜிராஜபுரம் மற்றும் நன்னிலம் பகுதியில் என 9 இடங்களில் நீர்மூழ்கித் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. இந்த நீர்மூழ்கித் தடுப்பணைகளால் பராமரிப்பு செலவுகள் கிடையாது. யாருக்கும் எவ்வித பாதிப்பும்

இருக்காது. பல ஆண்டுகள் இந்த அணைகள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் பூமிக்கு அடியில் தரமான தார்ப்பாய்கள் போடப்பட்டு அதில் மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்படுகிறது.

மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள நீர்மூழ்கித்தடுப்பணைகள் மற்றும் நீர்செறிவூட்டும் திட்டத்தால் நீரின் உப்புத்தன்மை மாறி மக்கள் மற்றும் விவசாயத்துக்கு பயன்படும் வகையில் நீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.புதிதாக கட்டப்படும் நீர்மூழ்கித் தடுப்பணைகள் 15 நாளில் முடிக்கப்படும். இதுதவிர மாவட்டத்திலுள்ள 10 ஒன்றியங்களில் தலா 50 இடங்களில் ஆழ்துளை குழாய் மூலம் நீர்செறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்றார் நடராசன்.

## பெங்களூருவில் திராட்சை, தர்ப்பூசணி விற்பனைத் திருவிழா

**பெங்களூரு,**

பெங்களூருவில் திராட்சை, தர்ப்பூசணி விற்பனைத் திருவிழா புதன்கிழமை தொடங்கியது.

கர்நாடக தோட்டக்கலை உற்பத்தியாளர் கூட்டுறவு சந்தைப்படுத்தல், பதனிடுதல் சங்கம் (ஹாப்காம்ஸ்) சார்பில் நடைபெற்ற இந்த விழாவை மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி தொடக்கிவைத்துப் பேசியது:

ஹாப்காம்ஸ் சார்பில் பெங்களூருவில் உள்ள அதன் 25 கிளைகளிலும் திராட்சை, தர்ப்பூசணி விற்பனைத் திருவிழா நடைபெறுகிறது. இந்த திருவிழா இன்னும் ஒரு மாதத்திற்கு நடைபெறும்.

மக்களிடம் வரவேற்பு காணப்பட்டால், மேலும் சில நாள்களுக்கு இந்தத் திருவிழா நீட்டிக்கப்படும். மக்களுக்கு தரமான திராட்சை, தர்ப்பூசணி பழங்களை வழங்குவதே இந்த விழாவின் நோக்கம்.

மக்களின் நலன் கருதி ஹாப்காம்ஸ் காய்கனி அங்காடிகளை மேலும் பல இடங்களில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மைக் காலமாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், பழம், காய்கறிகளின் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீர்மட்டத்தை

உயர்த்துவதற்காகவே எத்தினஹொளே நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்றார் அவர்.

விழாவில் ஹாப்காம்ஸ் தலைவர் எச்.கே.நாகவேணி சந்திரசேகர ரெட்டி பேசியது: பாகல்கோட்டை, குல்பர்கா, பிஜாப்பூர், கோலார், பெங்களூரு ஊரக மாவட்டங்களில் இருந்து நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் பழங்கள் இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

திராட்சை, தர்ப்பூசணி தவிர, உலர் திராட்சை, முந்திரி, பாதாம், பிஸ்தாவும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மலிவு விலையில், தரமான பழங்கள் விற்கப்படுகின்றன. இந்தத் திருவிழாவில் 800 மெட்ரிக் டன் திராட்சை, 2,500 மெட்ரிக் டன் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

விழாவில் மாமன்ற உறுப்பினர் உதயசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கை**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ள மாவட்டங்களில் நீர்மட்டத்தை உயர்த்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மாநில சிறிய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி தெரிவித்தார்.

கர்நாடக சட்ட மேலவையில் புதன்கிழமை பாஜக உறுப்பினர் பி.ஜே.புட்டசாமியின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

கர்நாடகத்தில் பரவலாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. கொப்பள், கதக், கோலார், சிக்பளாப்பூர், பிஜாப்பூர் ஆகிய மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளது.

எனவே, இந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. சிறுமலை, குன்றுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும்.ராஜஸ்தான் மாநிலத்தில் கடைப்பிடிப்பதை போல நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏரிகள், குளங்கள், குட்டைகளை சீரமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.நிலத்தடிநீரை முறையாகப்

பயன்படுத்துவது, பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார் அவர்.

**வேளாண் ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் வேளாண் ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று, அந்த மாநில முதல்வர்

சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு விதான செய்தாவில் வேளாண் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற சிறந்த விவசாயிகளுக்கான பரிசளிப்பு விழாவில் அவர் பேசியது:

மக்கள் உயிர் வாழ்வதற்கு தேவையான உணவுப் பொருள்களை வழங்கும் விவசாயத்தை நாம் அனைவரும் மதிக்க வேண்டும். ஆனால், விவசாயத் தொழில் நசிந்து வருவது வேதனை அளிக்கிறது.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்த விவசாயிகள், தங்களின் குழந்தைகளை வேறு தொழிலுக்கு அனுப்புகின்றனர். விவசாயத் தொழிலில் நியாயமான லாபம் கிடைக்காததே இதற்கு காரணம்.

எனவே, இளைஞர்களை ஈர்க்கக் கூடியதாக விவசாயத்தை மாற்ற வேண்டும். விவசாயம் லாபகரமானதாக மாறினால், இளைஞர்கள் ஆர்வமாக விவசாயப் பணிகளில் ஈடுபடுவர். வேளாண் தொழிலுக்கு அரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது.

அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டிலும் விவசாயத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நிம்மதியாக, கெப்ரவத்துடன் வாழும் சூழ்நிலையை உருவாக்க பல்வேறு புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் வெற்றி பெற வேண்டும்.

கர்நாடகத்தில் மானாவரி விவசாயம் அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு, மானாவரி விவசாய மேம்பாட்டுக்கு பட்ஜெட்டில் ரூ. 500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.விவசாயிகள் பலர் தங்கள் குடும்பத்துடன் நகர்ப்புறங்களில் குடியேறுவதால், நகரங்களில் மக்கள் நெரிசல் அதிகரித்து வருகிறது.

விவசாய ஆராய்ச்சிகளிலும், புதிய ரகங்களை அறிமுகம் செய்வதிலும் வேளாண் பல்கலைக்கழகங்கள் கவனம் செலுத்த வேண்டும். விதை, உரம் வழங்கும் பணியை மட்டுமே வேளாண் துறை மேற்கொள்ளக் கூடாது.

விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் துறையாகவும் இது மாற வேண்டும். நீர்ப்பாசனத்துறைக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், பட்ஜெட்டில் ரூ. 11 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் சித்தராமையா.

முன்னதாக, நிகழ்ச்சியை குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்த முதல்வர் சித்தராமையா சிறந்த விவசாயிகளுக்கு பரிசளித்து கெüரவித்தார். விழாவில் மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகெüடா, போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி, எம்.எல்.ஏ. அசோக் கெனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உதவி வேளாண்மை அலுவலர் பணியிடம் : போட்டி தேர்வு நடத்தி நிரப்ப முடிவு**

சென்னை: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை நிரப்ப, அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில், 2009 மற்றும் 2011ம் ஆண்டுகளில், உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம், நேரடியாக நிரப்பப்பட்டது. தற்போது, திறமையான இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், போட்டித் தேர்வு நடத்தி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என, வேளாண்மை கமிஷனர், அரசுக்கு கடிதம் எழுதினார். அதை ஏற்று, 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப, அனுமதி அளித்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**வறட்சியால் 5 மாத கரும்புகள்.... அறுவடை அரைகுறை...! குறைந்த விலைக்கு கால்நடை விற்பனை**



மேலூர்:'இப்ப வருமோ... எப்ப வருமோ...' என விவசாயிகளுக்கு போக்கு காட்டிய பருவமழையால், இந்த ஆண்டு கோடையை சமாளிக்க முடியாமல் விவசாயிகள், தவியாய் தவிக்கின்றனர்.

பெரியாறு பாசன கால்வாயால் மேலூர் தாலுகா பகுதிகளில் விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். வைகை மூலம் கிடைக்க வேண்டிய நீர், தேவைக்கு கிடைக்காததால், பாசனம் மிகுந்த இடங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் அதலபாதாளத்திற்கு சென்று விட்டது.

வயல்பகுதிகளில் 10 அடியில் கிடைத்த தண்ணீர், இன்று 60 அடியில் கிணறு தோண்டியும் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. எஞ்சியிருக்கும் சாகுபடி பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள், வருணபகவானை வேண்டி தவம் கிடக்கின்றனர்.கிராமங்களில் கால்நடைகளுக்கான, தீவனபுல் தட்டுப்பாடு இப்போது பெரும் பிரச்னையாக உள்ளது. கூடவே தண்ணீர் பிரச்னை. அதிக விலை கொடுத்து தீவனங்கள் வாங்கி கொடுக்க முடியாமல் விவசாயிகள் பலர், வீட்டு கால்நடைகளை விற்பனை செய்கின்றனர். இவற்றிற்கு பாதி விலை, வியாபாரிகளால் நிர்ணயிக்கப்படுவதால், என்ன செய்வது என தெரியாமல் திணறுகின்றனர்.மேலூர் ஒன்றியத்திற்குட்பட்ட வண்ணாம்பாறைப்பட்டியில் பெரியாறு பாசனக்கால்வாய் மற்றும் கிணற்றுப்பாசனத்தை நம்பி, பல ஏக்கரில் கரும்பு சாகுபடி ய்யப்பட்டிருந்தது. நடவு செய்யப்பட்ட 5 மாதத்திலேயே, தண்ணீரின்றி அரைகுறை பருவத்திலேயே அறுவடை நடந்து வருகிறது.விவசாயி முருகன்: என்னை போல் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நான் 10 ஏக்கரில் சாகுபடி செய்திருந்தேன். கால்வாய் பாசனம் இல்லாவிட்டாலும், கிணற்று

பாசனத்தால் பயிரை காப்பாற்றிவிடலாம் என நினைத்தேன். ஆனால், கிணறும் வேகமாக வறண்டு விட்டது. இன்னும் ஒரு வாரம் ஆனால், கரும்பு முழுவதும் காய்ந்து விடும். அதனால், 5 மாதத்திலேயே வெட்டுகிறேன். ஒரு ஏக்கருக்கு 65 டன் கரும்பு கிடைக்கும். இப்போது பாதி பருவத்தில் அறுவடை செய்வதால், ஏக்கருக்கு 20 டன் கூட தேறாது. நடவு கூலி கூட கிடைக்காத நிலை தான் ஏற்பட்டுள்ளது, என்றார்.அரைகுறையாக வெட்டப்படும் கரும்பு தோகையின் விலையும் கூடியுள்ளது. சராசரியாக ரூ.50 கிடைக்கும் தோகை, இந்த வறட்சியால் ரூ.150 வரை கூடியுள்ளது. கரும்பு வெட்டும் இடங்களில் இதை வாங்குவதற்கும் பல கி.மீ., தூரம் பயணித்து விவசாயிகள் வந்து வாங்கிச் செல்கின்றனர்.கிராமங்களில் தலைவிரித்தாடும் தண்ணீர் தட்டுப்பாடுகளால் விவசாயிகள், சாகுபடி பயிர்கள், கால்நடைகள் நிலை பரிதாபமாகவே உள்ளது.

**செக்கானூர் பேரேஜ் பராமரிப்பு நடக்குமா? மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து சரிவு**

மேட்டூர்: நீர்மட்டம் குறைவாக இருந்ததால், கடந்த ஆண்டு, செக்கானூர் பேரேஜ் பராமரிப்பு பணி நடக்கவில்லை. மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால், நடப்பாண்டிலும் பராமரிப்பு பணி மேற்கொள்ள முடியுமா, என்ற கவலை மின்வாரியத்துக்கு ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் முதல் நாமக்கல் வரை காவிரி குறுக்கே, ஆறு இடங்களில் பேரேஜ் (கதவணை தடுப்பு மின் உற்பத்தி நிலையம்) கட்டப்பட்டுள்ளது. தலா அரை டி.எம்.ஸி., (50 கோடி கன நீர்) வீதம், ஆறு பேரேஜ்களிலும், 3 டி.எம்.சி., நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு, 20,000 கனஅடி நீர் வெளியேற்றும் பட்சத்தில், ஒரு "பேரேஜ்' ல், 30 மெகாவாட் வீதம், 180 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும்.

ஆண்டுதோறும் ஜனவரி, 28ல் டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டதும், வரிசையாக ஒவ்வொரு பேரேஜ்களிலும் தேக்கி வைத்துள்ள, அரை டி.எம்.ஸி, நீரை கீழ் பகுதி காவிரியாற்றில் திறந்து விட்டு, நீரில் முழ்கியிருந்த ஷட்டர்களில் தொடர்ந்து, 20 நாட்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும். அதன் பின், ஆண்டு முழுவதும் மின் உற்பத்தி செய்யப்படும்.

நடப்பாண்டு வெண்டிப்பாளையம், ஆறாவது "பேரேஜ்' ல் கடந்த, 1ம் தேதி பராமரிப்பு பணி துவங்கி இன்று (ஃபிப்.20) நிறைடைகிறது. அடுத்து, சமயசங்கலி

"பேரேஜ்' ல் ஃபிப்., 21 முதல் மார்ச், 12ம் ÷தி வரையிலும், ஊராட்சி கோட்டையில் மார்ச், 13 முதல், ஏப்.1ம் தேதி வரையிலும், குதிரைக்கல்மேட்டில் ஏப்ரல், 2 முதல், 21ம் தேதி வரையிலும், நெருஞ்சிப்பேட்டையில் ஏப்ரல், 22 முதல் மே,11ம் தேதி வரையிலும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக, செக்கானூர் "பேரேஜ்' ல் மே,12 முதல், 31 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, மே மாதம் மேட்டூர் அணை நீர்மட்டம், 18 அடியாகவும், நீர் இருப்பு, 3.5 டி.எம்.சி.,யாகவும் சரிந்து விட்டது. இதனால், செக்கானூர் பேரேனில் தேக்கி வைத்த, அரை டி.எம்.ஸி., நீரை வெளியேற்றி பராமரிப்பு பணி செய்தால், சேலம் மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவானது. இதனால், கடந்த ஆண்டு, செக்கானூர் பேரேஜ் பராமரிப்பு பணியை மட்டும் மின்வாரியம் கைவிட்டது. நீர்வரத்து குறைந்ததால், நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 50.710 அடியாக குறைந்து விட்டது. கோடை மழை கைகொடுக்காவிட்டால் மே மாதம் நீர்மட்டம் மேலும் சரியும் அபாயம் உள்ளதால், நடப்பாண்டிலும் செக்கானூர் பேரேஜில் பராமரிப்பு பணி மேற்கொள்ள முடியுமா என்ற கவலை மின்வாரியத்துக்கு ஏற்பட்டுள்ளது.

**கூலியாட்கள் பற்றாக்குறை: பழுத்து உதிரும் மிளகாய்**

மேட்டூர்: சேலம் மாவட்டத்தில், கொளத்தூர் சுற்றுப்பகுதியில்தான், மிளகாய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும், டிசம்பர் மாத இறுதியில், உலர்ந்த மிளகாய் வத்தல், கொளத்தூர் சந்தைக்கு விற்பனைக்கு வரும். மார்ச் வரை,மிளகாய் சீஸன் நீடிக்கும்.

நடப்பாண்டு, கொளத்தூர் பகுதியில், 1,000 ஏக்கருக்கும் மேல் விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்தனர். கடந்த இரு மாதங்களாக, கொளத்தூர் சந்தைக்கு மிளகாய் வத்தல் விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகமானதால், சந்தையில் ஒரு கிலோ மிளகாய் வத்தல் அதிகபட்சமாக, 100 ரூபாய்க்கு விற்பனையானது.

ஐந்து ஆண்டுகளாக மிளகாய் வத்தல் விலை உயராத நிலையில், விதை, உரம், பாராமரிப்பு செலவு அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கடும் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர். இந்நிலையில், செடியில் பழுத்த மிளகாயை பறிக்க, போதிய கூலியாட்களும் கிடைப்பதில்லை. இதனால், வெளியூர்களில் இருந்து

கூலியாட்களை, வாகனத்தில் அழைத்து வந்து, விவசாயிகள், தங்கள் நிலத்தில் மிளகாய் வத்தல் அறுவடை செய்கின்றனர். பல இடங்களில், கூலியாட்கள் பற்றாக்குறையால், பறிக்க முடியாமல், செடிகளிலேயே மிளகாய் பழுத்து உதிர்வது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

**வெங்காயம் இருப்பு வைக்கும் கிடங்கு வேளாண் பொறியியல் துறையினர் ஆய்வு**

கோபிசெட்டிபாளையம்: தமிழகம் முழுவதும், 250 மெட்ரிக் டன் வெங்காயம் இருப்பு வைக்கும் வகையில், தேசிய வேளாண்மை உற்பத்தி திட்டம் மூலம், மானியத்தில், கிடங்கு அமைக்க, ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில், ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி, திருச்சி, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில், சி.எஸ்., 450, சி.எஸ்., 911, சி.எஸ்., 450, ஏ.சி., 863 ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது. ஆண்டுதோறும், இருமுறை சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, ஆறு டன் முதல், எட்டு டன் வரை சின்ன வெங்காயம் விளைச்சலாகிறது.
ஒரு ஹெக்டர் நடவு செய்ய, 1,000 கிலோ விதை வெங்காயம் தேவைப்படுகிறது. நடவு செய்யப்பட்ட, 70 முதல், 90 நாட்களில் வெங்காயம் அறுவடைக்கு வருகிறது. வெங்காயம் அறுவடை நேரத்தில் திடீரென வீழ்ச்சியாகிறது. விவசாயிகள், தங்கள் வீடுகளில் சாரம் அமைத்து, வெங்காயத்தை கட்டி தொங்க விடுவர். விலை அதிகரிக்கும்போது, வெங்காயம் விற்பனை செய்வது வாடிக்கையாக உள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில், மானியத்தில் கிடங்கு அமைத்து, டன் கணக்கில் வெங்காயம் இருப்பு வைக்கும் திட்டத்தை, தமிழக அரசு முதல் முறையாக செயல்படுத்தி உள்ளது.
தேசிய வேளாண்மை உற்பத்தி திட்டத்தில், தமிழகம் முழுவதும் கிடங்கு அமைக்க, ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, கோவை, திருச்சி, நாமக்கல் உள்பட, 12 மாவட்டங்களில், மானியம் விலையில் கிடங்கு அமைக்க, 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில், நான்கு விவசாயிகளுக்கு மானிய விலையில், வெங்காய இருப்பு கிடங்கு அமைத்து தரப்பட்டுள்ளது. கொங்கர்பாளையத்தில் விவசாயிகள் சீனிவாசன் அமைந்திருந்த, வெங்காய இருப்பு கிடங்குகளை, வேளாண்மை பொறியியல் உதவி செற்பொறியாளர்

கிருஷ்ணமூர்த்தி, ஆய்வு செய்தார்.அவர் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், 5,000 ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயம் இருப்பு வைத்து விவசாயிகள் பயன்பெறும் வகையில், மானியத்தில் கிடங்கு அமைக்கும் திட்டத்தை, தமிழக அரசு செயல்படுத்தி உள்ளது. தேசிய வேளாண்மை உற்பத்தி திட்டத்தில், தமிழகம் முழுவதும், 250 மெட்ரிக் டன் வெங்காயம் இருப்பு வைக்கும் வகையில், கிடங்கு அமைக்க, ஆறு கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. முதல் கட்டமாக சோதனை அடிப்படையில், கிடங்கு அமைக்க, 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு டன் வெங்காயம் இருப்பு வைக்கும் கிடங்கு அமைக்க, 4,000 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக, 25 டன் வெங்காயம் இருப்பு வைக்கும் அளவுக்கு, மானியம் வழங்கப்படுகிறது. மகராஷ்டிரா மாநிலத்தில், இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் முதல் முறையாக திட்டம், செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்பட்டுள்ள கிடங்குகளை வேளாண்மை பொறியியல் பல்கலைக்கழக அதிகாரிகள் ஆய்வு செய்து, அரசுக்கு தெரிவித்த பின், திட்டம் முழுமையான நடைமுறைக்கு வரும், என்றனர்.

**தோட்டக்கலை பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

படப்பை : குன்றத்தூர் ஒன்றியத்தில், தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. தோட்டக்கலைத் துறையினரால், குன்றத்தூர் ஒன்றிய தோட்டக்கலைப் பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு, கரசங்கால் ஊராட்சியில் உள்ள துண்டல்கழனி சமுதாயநலக் கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டது.மா, கொய்யா, சப்போட்டா ஆகிய பழ மரங்களில் நெருக்கு நடவு கவாத்து செய்தல், காய்கறிகளில் நிலப்போர்வை அமைத்தல், பசுமை குடிலில் காய்கறி சாகுபடி செய்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் வேல்முருகன் எடுத்துரைத்தார்.

காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகள், கத்திரி, வெண்டை போன்ற பயிர்களில் காய்புழுதாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு முறைகள் குறித்து பேராசிரியர் காயத்ரி செய்து காட்டினார். பின்னர் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து,

குன்றத்தூர் ஒன்றிய தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கரோலின் எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பருத்தி, உளுந்து வரத்து அதிகரிப்பு**

விழுப்புரம் : விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் பருத்தி மற்றும் உளுந்து வரத்து அதிகரித்துள்ளது. விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் நேற்று 800 குவிண்டால் பஞ்சு, 700 மூட்டை உளுந்து, 3,800 மூட்டை நெல் உள்ளிட்டவை விற்பனைக்கு வந்தது. வழக்கமாக நெல் வரத்து 4 ஆயிரம் மூட்டைகள் வரை இருக்கிறது. இருப்பினும் நேற்று பருத்தி மற்றும் உளுந்து வரத்து அதிகம் இருந்தது. இதனால் மார்க்கெட் கமிட்டி கட்டடங்களில் இடம் இல்லாததால், கட்டடத்திற்கு வெளியேயும் விவசாயப் பொருட்கள் ஏலத்திற்கு வைக்கப்பட்டிருந்தன. நேற்று அதிகபட்ச விலையாக நெல் மூட்டை ஒன்று 1,236 ரூபாயும், பஞ்சு குவிண்டால் 5,200 ரூபாய், உளுந்து 5,600 ரூபாய், பச்சை பயிறு 6,666 ரூபாய், பனிப் பயிர் 6,111 ரூபாய், கம்பு 1,470 ரூபாய் மற்றும் கேழ்வரகு 1,979 ரூபாய்க்கும் விலை போனது.

**பால் உற்பத்தியை அதிகரிக்கும் கலப்பு தீவனம்**

கோவை : மாடுகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கும், கலப்பு தீவனத்தை வீடுகளிலே தயாரிக்க முடியும் என, மாதிரி தீவன பரிசோதனையில் தெரியவந்தது. கறவை மாடுகளின் பால் உற்பத்திக்கு, சத்துள்ள தீவனங்கள் கொடுப்பதோடு, சுகாதாரமான முறையில் பராமரிப்பது அவசியம். இதில், தானியங்கள், அடர், உலர் தீவனங்களை சேர்த்து, கலப்பு தீவனமாக கொடுக்கும் பட்சத்தில், அதிகளவு சத்துக்கள் கிடைப்பதோடு, பால் உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. மேலும், இந்த கலப்பு தீவனத்தை, கடைகளில் வாங்கி மாடுகளுக்கு உணவாக கொடுப்பதை காட்டிலும், தீவனங்களின் அளவுக்கேற்ப வீடுகளிலே தயாரிக்க இயலும். கலப்பு தீவன தயாரிப்பு குறித்து, கால்நடை பயிற்சி மையத்தில், மாதிரிகள் தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மலிவாக கிடைக்கும் தீவனங்களான, சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி, அரிசி, புண்ணாக்கு, தவிடு, தாது உப்புகள் மற்றும் சமையல் உப்பு ஆகியவை கலந்து தயாரிக்கப்பட்டது. இந்த தீவன மாதிரியை, கறவை மாடுகளுக்கு உணவாக அளித்து, பால் உற்பத்தியின் அளவு

கணக்கிடப்பட்டது. இதில், முன்பை காட்டிலும் அதிகளவு பால் உற்பத்தியாவதும், மாடுகள் ஆரோக்கியமாக இருப்பதும் கண்டறியப்பட்டது. கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சிவக்குமார் கூறுகையில்," 10 கிலோ கலப்பு தீவனம் தயாரிக்க, நான்கு கிலோ தானியங்கள், மூன்று கிலோ புண்ணாக்கு, 2.75 கிலோ தவிடு, 200 கிராம் தாது உப்பு கலவை மற்றும் 50 கிராம் சமையல் உப்பு ஆகியவற்றை சேர்த்து, பொடியாக அரைத்து, மாடுகளுக்கு உணவாக கொடுக்கலாம். இதை, கால்நடை வளர்ப்போர், கோடைக்காலத்தில் தீவன தட்டுப்பாடு ஏற்படும் சமயத்தில், மாடுகளுக்கு உணவாக கொடுப்பதால், சத்துக்குறைபாடு பிரச்னை ஏற்படுவதை குறைக்கலாம்," என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர் : விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நாளை, 21ம் தேதி, நடைபெற உள்ளது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை பகல், 11:00 மணிக்கு, ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் உள்ளிட்ட, வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

இத்தகவலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**நாட்டுக்கோழி வளர்ப்பு; பிப்., 25ல் பயிற்சி வகுப்பு**

நாமக்கல்: "ஃபிப்ரவரி, 25ம் தேதி, நாட்டுக்கோழி வளர்ப்பும் மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிச்சி வகுப்பு நடக்கிறது' என, பேராசிரியர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல்- திருச்சி சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், வரும், 25, மதியம், 1.30 மணிக்கு கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்களின் நலன் கருதி, நாட்டுக்கோழி வளர்ப்பும் முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், இலவச பயிற்சி நடக்கிறது.பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்கள், பண்ணை அமைக்க விருப்பம் உள்ள தொழில் முனைவோர் நேரிலோ அல்லது, 94432 51330, 04286 233230 போன் எண்கள் மூலமாகவோ தொடர்பு கொண்டு பெயரை முன் பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தண்ணீர் வற்றியதால் மேய்ச்சல் நிலமாக மாறிய காவிரி ஆறு**

பள்ளிபாளையம்: காவிரியில், தண்ணீர் வறண்டதால், தற்போது, கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது.காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், போதிய மழைப்பொழிவு இல்லாததால், காவிரியில், தண்ணீர் வரத்து நின்று போனது. அதனால், மேட்டூர் அணையில், போதிய தண்ணீர் இருப்பு இல்லாததால், பாசனத்துக்காக, தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது.
அதன் காரணமாக, சொற்ப அளவு தண்ணீரே, காவிரியில் செல்கிறது. கோடைகாலம் துவங்கியுள்ள நிலையில், தண்ணீர் வற்றி, வறண்ட பாலைவனமாக, காவிரி காட்சியளிக்கிறது.இந்த இடைபட்ட காலத்தில், காவிரியில் தண்ணீர் இல்லாத பகுதிகளில், புல், பூண்டு முளைத்து, நன்கு செழிப்பாக காணப்படுகிறது. அங்கு, விவசாயிகள், தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து, மேய்த்துச் செல்கின்றனர். இந்த புற்கள், சத்தாக இருப்பதுடன், அதிகளவு பால் சுரக்க உதவுகிறது.மேலும், இந்த புற்களை மேயும் கால்நடைகளும், விரைவில் செழிப்பாக வளரவும் செய்கிறது. அதனால், ஏராளமான விவசாயிகள், காவிரி ஆற்றை, தங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாற்றி வருகின்றனர்.

**வேளாண் கருவி செயல் விளக்கம்**

ராசிபுரம்: நாமகரிப்பேட்டை வட்டார வேளாண் பொறியியல் துறை சார்பில், வேளாண் கருவிகள் குறித்த செயல்விளக்க பயிற்சி நடந்தது.உதவி செயற்பொறியாளர் பார்த்திபன் தலைமை வகித்தார். வயல்வெளியில் டிராலி

ஸ்ப்ரேயர், ஃபவர் ஸ்ப்ரேயர், மின்சார தெளிப்பான், மரக்கிளையை வெட்டும் கருவி குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.அதே போல், கன்றுகள் நடவு செய்யும் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, களை எடுக்கும் கருவி, பிரஸ்கட்டர், பார் அமைத்தல், வரப்பு அமைத்தல் கருவி போன்றவை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.வேளாண் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் அழகுதுரை உட்பட பலர் பங்கேற்றனர்.

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம் ரூ. 50 லட்சத்திற்கு விற்பனை**

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றன.நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 2,051 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சம், 8,699 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 6,689 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள் அதிகபட்சம் மூட்டை, 7,299 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 6,209 ரூபாய்க்கும் ஏலம் போனது.அதே போல், பனங்காலி ரகம், அதிகபட்சம், 14 ஆயிரத்து, 409 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 14,009 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று, 50 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

**நிலக்கடலை சாகுபடிக்கு 50% மானியத்தில் ஜிப்சம் வேளாண் அதிகாரி தகவல்**

நாமக்கல்: "நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியத்தில், ஜிப்சம் வினியோகம் செய்யப்படுகிறது' என, கபிலர்மலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:கபிலர்மலை வட்டாரத்தில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானிய விலையில், ஜிப்சம் மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்படுகிறது. ஒரு நபருக்கு அதிக பட்சமாக, எட்டு மூட்டை அதாவது, 400 கிலோ ஜிப்சம் வழங்கப்படுகிறது.ஜிப்சம் மானிய விலையில் பெற, நிலத்தின் சிட்டா மற்றும் ரேஷன்கார்டு நகரை காண்பித்து பெற்றுக் கொள்ளலாம். நிலக்கடலையில், திரட்சியான மகசூல் பெற அடியுரமாக, 200 கிலோ ஜிப்சமும், 45வதுந ாளில், 200 கிலோ ஜிப்சமும், 2.50 ஏக்கர் (ஒரு ஹெக்டேர்) பரப்பிற்கு இட வேண்டும்.ஜிப்சம் இடுவதால், எண்ணெய் வித்து கூடுவதுடன், காய்கள் திரட்சியாக பொக்கில்லாமல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான ஜிப்சம் மற்றும் உயிர் உரங்கள் கபிலர்மலை வட்டாரத்தில் உள்ள கபிலர்மலை வேளாண் விரிவாக்க மையம் மற்றும் சோழசிராமணி துணை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு, 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தேவைப்படும் விவசாயிகள், அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஒருவந்தூர் பி.ஏ.சி.பி.,யில் 1,000 வாழைத்தார் ஏலம்**

மோகனூர்: ஒருவந்தூர் பி.ஏ.சி.பி.,யில் நடந்த ஏலத்தில், 1,000 வாழைத்தார்கள், 2.47 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கீழ், மோகனூர் அடுத்த ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை, வாழைத்தார் ஏலம் நடக்கிறது.இங்கு, சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ரஸ்தாளி, பூவன், மொந்தன், கற்பூறவள்ளி, பச்சநாடன் போன்ற ரகங்கள் அறுவடை செய்து, ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது.நேற்று நடந்த ஏலத்துக்கு, என்.சி.எம்.எஸ்., தலைவர் தென்னரசு தலைமை வகித்தார். ஒருவந்தூர் பஞ்சாயத்து தலைவர் வக்கீல் செல்லராஜாமணி, பி.ஏ.சி.பி., தலைவர் பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 1,000 வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது.நாமக்கல், சேலம், கரூர், திருச்சி போன்ற பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மொத்த தார்களும், 2.47 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதிக பட்சமாக ஒரு வாழைத்தார், 650க்கும், குறைந்த பட்சமாக, 400

ரூபாய்க்கும் விற்பானையானது. ஏலம் முடிந்ததும், விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**வாத்துக்கறி விலை உயர்வு விற்பனையாளர் மகிழ்ச்சி**

ப.வேலூர்: வரத்து குறைவாலும், தேவை அதிகரிப்பாலும், வாத்துக்கறி விலை உயர்ந்துள்ளது.

ப.வேலூர் பைபாஸ் சாலை, காவேரி பாலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 20க்கும் மேற்பட்ட வாத்துக் கடைகள் உள்ளன. தமிழகத்தில், விருதுநகர், ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, அதிகளவில் வாத்துகள் வரவழைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.வாத்துக்கறி சுவையாக இருப்பதுடன், சளி, இருமல் போன்ற நோய்களுக்கு மருந்தாக உள்ளதால், இறைச்சிப் பிரியர்கள், அதை விரும்பிச் சாப்பிடுகின்றனர். அதனால், வாத்துக்கறி தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதுதேவை அதிகரித்துள்ளதால், அதன் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு வாத்து, 180க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று, 50 உயர்ந்து, 230 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட, பெண் வாத்து, தற்போது, 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.மேலும், அங்கேயே சமைத்துக் கொடுத்தால், கூடுதலாக, 70 ரூபாய் தரவேண்டும். ஒரு வாத்து முட்டை, ஒன்பது ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை உயர்வால், வாத்துக்கடை உரிமையாளர்கள், விற்பனையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காய்கனி அலங்கார உற்சவ விழா**

ராசிபுரம்: ராசிபுரம் நித்திய சுமங்கலி மாரியம்மன் கோவிலில், ஆறாம் ஆண்டாக காய்கறி அலங்கார உற்சவ விழா நடக்கிறது.

ராசிபுரம் நகர மாரியம்மன் கோவிலில், ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தில் காய்கறி அலங்கார உற்சவ விழா நடக்கும். அதன்படி, ஆறாம் ஆண்டு விழாவாக, வரும், 28ம் தேதி, ஸ்வாமிக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடக்கிறது. தொடர்ந்து, 108 வகை காய்கனி அலங்காரத்தில், அம்மன், பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.காய்கனி அலங்காரத்தில், சகல தோஷம், திருமண தோஷம்,

புத்திர பாக்கியம், நாகதோஷம், செவ்வாய் உள்ளிட்ட தோஷங்கள் உள்ளவர்கள் பங்கேற்று, அம்மன் அருள் பெறலாம் என, நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

**நெமிலியில் இருந்து சென்னைக்கு 4 டன் காய்கறிகள்; கலெக்டர் தகவல்**

வேலூர்: நெமிலி சேமிப்பு கிடங்கில் இருந்து, சென்னைக்கு தினமும், நான்கு டன் காய்கறிகள் அனுப்பப்படுவதாக கலெக்டர் தெரிவித்தார். வேலூர் மாவட்டம் ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட புதுப்பாடி, காவேரிப்பாக்கம், ஆயர்பாடி, நந்திமங்கலம், நெட்டிவலம், கீழ் வீதி ஆகிய இடங்களில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திருந்திய நெல் சாகுபடி பயிர் முறைகளையும், வளர்ச்சி திட்டப்பணிகளையும் கலெக்டர் நந்தகோபால் ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: வேலூர் மாவட்டத்தில், 22 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், அரசு, 5, 400 ஹெக்டேர் சாகுபடிக்கு, மானியம் வழங்கி வருகிறது. இந்த சாகுபடி முறைக்கு, 50 சதவீதம் தண்ணீர் மட்டும் தேவை. விளைச்சல் இரு மடங்கு ஆகும். முதல்அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி, சென்னை மக்களின் காய்கறிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், பெரு நகர காய்கறி திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டம் நெமிலி, கீழ் வீதி காய்கறி சேமிப்பு மையத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. விவசாய நிலத்தில் இருந்து உற்பத்தி செய்யும் காய்கறிகளை, இந்த சேமிப்பு மையத்துக்கு கொண்டு வரவும், இங்கிருந்து, சென்னை கோயம்பேடு விற்பனை அங்காடிகளுக்கு, விவசாயிகளே கொண்டு செல்வதற்கு வசதியாக, 40 சதவீதம் மானியத்தில் அரசே வாகனங்களை வழங்கி உள்ளது. நெமிலி சேமிப்பு கிடங்கில் இருந்து, சென்னைக்கு தினமும், நான்கு டன் காய்கறிகள் அனுப்பப்படுகிறது, என்றார். ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் ஜெய்சுந்தர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன், தோட்டக் கலைத் துறை இணை இயக்குனர் அற்புதம் உள்பட பலர் உடனிருந்தனர்.

**கீரனூரில் கால்நடை தீவன கிடங்கு அமைச்சர்கள் திறந்து வைப்பு**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, கீரனூரில் ரூ.10 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட கால்நடைத்தீவன கிடங்கை கலெக்டர் (பொ) மாரிமுத்து தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்ரமணியன், மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் திறந்து வைத்தனர்.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்ரமணியன் பேசியதாவது:

தமிழக முதல்வர் கால்நடைகளுக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார். தற்போது திறக்கப்பட்ட இத்தீவனக்கிடங்கில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு அதிகபட்சமாக ஐந்து கால்நடைகளுக்கு மானிய விலையில் ஒரு கிலோ ரூ.2 வீதம் மூன்று கிலோ வீதம் தீவனம் வழங்கப்படுகிறது.

இதை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு கால்நடைகளின் வளர்ச்சியை பெருக்கியும், பால்வளத்தை பெருக்கியும் தங்களை பொருளாதார வளர்ச்சியில் முன்னேற வேண்டும். இவ்வாறு அமைச்சர் சுப்ரமணியன் பேசினார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் பேசியதாவது:

தமிழக முதல்வர் கால்நடை துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து கால்நடைகளின் வளர்ச்சியை பெருக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இதன் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் புதியதாக கால்நடை தீவனக்கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் கீரனூர், விராலிமலை, கோமாபுரம், ஆலங்குடி, அறந்தாங்கி, திருமயம், பொன்னமராவதி உள்ளிட்ட ஏழு இடங்களில் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் மிகக்குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி கால்நடை உற்பத்தியை பெருக்கி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும்.இவ்வாறு அமைச்சர் விஜயபாஸ்கர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடைத்துறை இணை இயக்குனர் மகாலிங்கம், உதவி இயக்குனர் டேனியல், தாமஸ், டவுன் பஞ்., தலைவர் பவுன்ராஜ், மாவட்ட பஞ்., கவுன்சிலர் துரைராஜ், ஆத்மா குழுத்தலைவர் சாம்பசிவம், பஞ்., தலைவர் ராமசாமி, தாசில்தார் கோவிந்தராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் போசங்கு,

நிலவள வங்கித்தலைவர் கருப்பையா, கால்நடை மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**சரக்கு ரயிலில் 1,920 டன் நெல் மூட்டைகள் அரவைக்கு "பயணம்'**

தஞ்சாவூர்: தஞ்சையில் இருந்து சென்னைக்கு அரவை பணிக்காக, சரக்கு ரயிலில் 42 வேகன்களில் 1,920 டன் நெல் மூட்டைகளை சேமிப்பு கிடங்கு அதிகாரிகள் மேற்பார்வையிட்டு அனுப்பி வைத்தனர்.
காவிரி பாசனத்தை நம்பியே டெல்டா விவசாயிகள் நெல், கரும்பு பயிரிட்டு வருகின்றனர். தமிழகத்தின் பிற பகுதி மக்களுக்கும் உணவளிக்கும் பகுதியாக, டெல்டா மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சை விளங்குகின்றன. இப்பகுதியில் விளையும் நெல் மூட்டைகள் தஞ்சை மத்திய சேமிப்பு கிடங்குக்கு அனுப்பப்பட்டு, பத்திரமாக சேகரித்து வைக்கப்படுகின்றன. தொடர்ந்து, அவ்வப்போது தேவைக்கேற்ப நெல் மூட்டைகள் சென்னை, கிருஷ்ணகிரி உள்பட பிற மாவட்டங்களுக்கு சரக்கு ரயிலில் அரவை பணிக்கு அனுப்பப்படுவது வழக்கம். அதன்படி, மத்திய சேமிப்பு கிடங்கில் இருந்து அரவை பணிக்காக கடந்த 15ம் தேதி தஞ்சை ரயில்வே ஸ்டேஷனுக்கு, 1,920 டன்கள் நெல், 47 ஆயிரத்து, 965 மூட்டைகளில் லாரிகள் மூலம் எடுத்து வரப்பட்டன.தொடர்ந்து, அங்கிருந்து, சரக்கு ரயிலில் 42 வேகன்களில் நெல்மூட்டைகளை ஏற்றி சென்னைக்கு தஞ்சை மத்திய சேமிப்பு கிடங்கு அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

**வெண்டை வயல் விழா**

தேனி:தேனி அருகே கொடுவிலார்பட்டியில், வெண்டைக்காய் வயல்விழா மற்றும் விவசாயிகளுக்கான கருத்தரங்கு. வெண்டைக்காய் விவசாயி வைருசாமி தோட்டத்தில் நடந்தது. மைக்கோ நிறுவன மண்டல மேலாளர் பிபின்குமார் தலைமை வகித்தார். மாவட்ட பிரதிநிதி சுதாகர் முன்னிலை வகித்தார். சுற்றிலும் உள்ள பத்து கிராமங்களை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். மைக் கோ நிறுவன தயாரிப்பில் விளைந்த வெண்டைக்காய், நம்பர் 28 மகசூல் பற்றி விவசாயிகளுக்கு

எடுத்துக்கூறப்பட்டது. சிறந்த விவசாயியாக தேர்வு பெற்ற வைருசாமிக்கு, மண்டல மேலாளர் பிபின்குமார் பரிசு வழங்கினார். களப்பணியாளர்கள் பங்கேற்றனர்.

**சூரிய சக்தியில் விவசாயத்திற்கான மின்மோட்டார் பம்ப் அறிமுகம்**

உத்தமபாளையம்: "கிரீன் எர்த் எனர்ஜி' என்விரான்மென்ட் மிஷன் ஆப் இந்தியா, நிறுவனத்தின் சார்பில், விவசாயத்திற்கான சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் பம்ப் செட் துவக்கவிழா, உத்தமபாளையம் ஒன்றியம் கீழசிந்தலைச்சேரியில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்தார்.

மாவட்ட மின்பகிர்மான கண்காணிப்பு பொறியாளர் ஹெப்சிபா சாமுவேல் முன்னிலை வகித்தார். உத்தமபாளையம் வேளாண்மை பொறியியல்துறை உதவிப் பொறியாளர் முகமதுஅலி மின் மோட்டாரை இயக்கி வைத்தார்.

விழாவில், சூரிய சக்தியில் 5 குதிரைதிறன் கொண்ட மின்மோட்டார் பம்ப் செட்டை விவசாய பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் தமிழகத்திலேயே முதன்முறையாக 41.6 பைசா வட்டியில், ரூ. 5 லட்சம் வங்கி கடன் பெற்று இந்நிறுவனம் வழங்கியுள்ள சூரியŒக்தி மின்மோட்டார் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சர்வதேச சூரிய சக்தி அமைப்புகளின் உறுப்பினர் உதயபாரதி கலந்து கொண்டு, சூரிய சக்தியில் 500 அடி ஆழம் வரை இயங்கும் மின் மோட்டார்களை செயல்விளக்கமாக செய்து காட்டினார்.

முன்னோடி விவசாயி பரமன், குள்ளப்ப கவுண்டன்பட்டி முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பாஸ்கரன், அழகர்சாமிபுரம் ஊராட்சி தலைவர் தங்கபாண்டியன், டெலிபோன் தேனி துணைக்கோட்ட பொறியாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் விவசாயிகள், விவசாய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவு



**மேட்டூர்**: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 50.71 அடியாக சரிந்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 79 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 600 கனஅடி வீதம் த ண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைக்கு வரும் நீரின் அளவை விட, திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகளவில் உள்ளதால் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 50.80 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 50.71 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 18.26 டிஎம்சி.

## வைக்கோல் விற்பனை துவக்கம்

**திருச்சி,:** தமிழகத்தில் நிலவும் தீவன பற்றாக்குறையை போக்க வறட்சி நிவாரண திட்டத் தில் கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனம் மானிய விலையில் வழங்க அரசு முடிவு செய்தது.அதன்படி ஒரு கிலோ உலர் தீவனம் ரூ.2வீதம் ஒரு

கால் நடைக்கு நாள் ஒன்றுக்கு 3கிலோ வீதம் 7நாட்களுக்கு 21 கிலோ வைக்கோல் வழங்கப்ப டும். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 கால்நடைகள் வீதம் வாரம் ஒன் றுக்கு 105 கிலோ வைக் கோல் வழங்க திட்டமிடப்பட்டது.

இதற்காக திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம், வளநாடு, மண்ணச்சநல்லூர், தண்டலைப்புதூர் ஆகிய அரசி னர் கால்நடை மருந்தகங்க ளில் உலர் தீவன வைக் கோல் கிட்டங்கிகள் அமைத்திட கிடங்கு ஒன் றிற்கு ரூ.10லட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டது.

மண்ணச்சநல்லூர் கால்நடை மருந்தக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தீவன உலர் தீவன கிட்டங்கியில் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் அமைச்சர் பூனாட்சி விற்பனையை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் எம்பி ரத்தினவேல், எஸ்பி ராஜேஸ் வரி, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராமு, மண்ணச்சநல்லூர் ஒன்றியக்குழு தலைவர் பரமேஸ்வரி முருகன், உதவி கலெக்டர் சரஸ்வதி, கால் நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் சின்னத்துரை, தாசில்தார் ஹென்றி சாமிதுரை உள்ளிட்டோர் கலந்து கொண் டனர்.

**உணவு பதப்படுத்துதல் பற்றி தொழில் முனைவோருக்கு பயிற்சி**

**திருச்சி,:** முசிறி அருகே உணவு பதப்படுத்துதல் பற்றி தொழில் முனைவோருக்கு பயிற்சி துவங்கியது.

முசிறி கொளக்குடிப்பட்டியில் வேளாண் விற்பனை, வேளாண் வணிகத்துறை மற்றும் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் மூலம் தொழில் முனைவோருக் கான 4 வார பயிற்சி தொட ங்கியது. கிராமாலயா நிர் வாக இயக்குனர் இளங்கோ வன் தொடங்கி வைத்தார். திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிக துணை இயக்குனர் சந்திரசேகரன், உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டுதலின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார்.

கிரேட் நிறுவன இயக்குனர் நளினி, தொழில் முனைதலின் அவசியம், மக ளிரின் பங்களிப்பு, தொழி லில் ஏற்படும் தடைகள் மற் றும் சந்தை வாய்ப்புகள் பற்றி விளக்கினார். திருச்சி உணவு பாதுகாப்பு அலுவ லர் விஸ்வநாதன், சிறுக மணி கே.வி.கே உதவி பேராசிரியர் கற்பகபாண்டி, வேளாண் வணிக அலுவலர் புஷ்பா சிவக்குமார் மற்றும் அமுதா ஆகியோர் சிறுதானியங்களில் உணவுகள் தயாரிக்கும்

முறைப்பற்றி விவசாயிகளுக்கு விளக்கினர்.திருச்சி வணிகம் மற்றும் வேளாண் விற்பனை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், தேசிய உணவு பதப்படுத் தும் இயக்கத்தின் கீழ் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு இணைந்து 12வது ஐந் தாண்டு திட்டத்தில் தேசிய உணவு பதப்படுத்தும் இய க்க திட்டம் கடந்த 2012ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்ட த்தை மானிய பங்குத் தொகையை 75:25 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசு வழங்கி செயல்படுத்துகிறது. இதன் குறிக்கோளாக உணவு பதப்படுத்துவதன் மூலம் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களின் மதிப்பை கூட்டு தல் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க வலியுறுத்தப்படுகிறது.

இந்த தொழில் முனை வோர் பயிற்சியானது தனி யார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. இதற்கான நிதியுதவியும் ரூ.2 லட்சம் நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது. கொளக்குடிப்பட்டியில் 30 பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பயிற்சிக்கென தனி பாடத்திட்டமும் தயாரிக்கப்பட் டது. பயிற்சிக்கு பிறகு பயிற்சி அளிக்கும் நிறுவனம் ஒரு வருட காலத்திற்கு பயனாளிகளுக்கு தேர்ந்த தொழில்முறைகள் பற்றி ஆலோசனை வழங்கவும், பயிற்சியாளர்கள் தொழில் தொடங்க வசதிகளும் செய்து தர வேண்டும். குறைந்தபட்சம் 50 சதவீத பயனாளிகள் உணவு பதப்படுத்தும் தொழில்கள் தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்றார்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி**

**தொட்டியம்,:** தொட்டியம் தாலுகா திருநாராணயபுரம் கிராமத்தில் வட்டார வேளாண்மைத்துறை மற்றும் திருச்சி மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் சார்பில் நெல் மற்றும் வாழை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் 2 நாள் நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜாமணி தலை மை வகித்தார். மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய உதவி இயக்குநர் உமாமகேஸ்வரி பயிற்சியை துவக்கி வைத்து, மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத் தின் செயல்பாடுகள் குறி த்து விளக்கி பேசினார்.

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத் தின் பயிர் பாதுகாப்பு அலுவலர்

திலீப்சையன், நெல் பயிரில் தாக்கக்கூடிய நோய்கள், பூச்சிகள் அவ ற்றை கட்டுப்படுத்தும் முறைகள், வாழையில் ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு முறைகள் குறித்து விளக்கினார். மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய ஓய்வு பெற்ற உதவி இயக்குனர் கிருஷ்ணசாமி, நெல் மற்றும் வாழைப்பயி ரில் நன்மை, தீமை செய்யும் பூச்சிகள் குறித்து வயலாய்வு மூலம் விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் தொட் டியம் வட்டார துணை வேளாண்மை அலுவலர் அழகர்சாமி, அட்மா வட் டார தொழில்நுட்ப மேலா ளர் சுகுந்தா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் கள் கார்த்திக், கார்த்திக்கே யன், மாசிலாமணி, ஆசைத்தம்பி, பன்னீர்செல்வம், தொழில்நுட்ப வல்லுநர் கள் யுவராஜ், கோபி ஆகி யோர் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் வேல்முருகன் நன்றி கூறி னார். தொட்டியம் வட் டார விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**காஞ்சிபுரம், :** காஞ்சிபுரம் கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்திலுள்ள ஊரக வளர்ச்சி திட்ட முகமை அரங்கில் நாளை காலை 11 மணிக்கு நடக்கிறது.

கலெக்டர் தலைமை வகிக்கிறார். இதில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை, வணிகத்துறை மற்றும் இதர வேளாண் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**அமராவதி ஆற்றுப்பாலம் கட்ட அஸ்திவார பணி தீவிரம்**

**கரூர், :** கரூர் பசுபதிபாளையம் அமராவதி ஆற்றுப்பாலம் கட்டுவதற்காக அஸ்திவாரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த 1967ம் ஆண்டு அமராவதி ஆற்றின் குறுக்கே பசுபதிபாளையம் பகுதியில் தரைப்பாலம் அமைக்கப்பட்டது. இப்பாலம் பழுதடைந்ததால் உயர்மட்டப்பாலம்

இதே இடத்தில் அமைக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தனர். அமராவதி ஆற்றின் குறுக்கே பசுபதிபாளையத்தையும், ஐந்துரோடு பகுதியையும் இணைக்கும் வகையில் புதிய உயர்மட்டப்பாலம் கட்ட தமிழக அரசு அனுமதி வழங்கியது. கடந்த ஆண்டு அக்டோபர் 14ம்தேதி புதிய பாலப்பணியினை அமைச்சர் செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்.

புதிய பாலம் கட்டுவதற்காக ஏற்கனவே போக்குவரத்துக்கு பயன்பட்டு வந்த தரைப்பாலம் அகற்றும் பணி நடைபெற்று வந்தது. பழைய தரைப்பாலத்தில் இருந்த மின்கம்பங்கள், மின்இணைப்புகள், குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. புதிய பாலம் கட்டும் வரை போக்குவரத்திற்காக பழைய தரைப்பாலத்தின் அருகில் குழாய்ப்பாலம் ஒன்று தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. ராட்சத சிமெண்டு குழாய்களை அமைத்து அதன்மேல் மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து இந்த பாலம் அமைத்து போக்குவரத்து நடைபெற்ற வருகிறது.

கருப்பாயி கோயில் இறக்கத்தில் இருந்து தொடங்கி இடதுபுறம் திரும்பி வழக்கமான, அதாவது பழைய பாலத்திற்கு வரும் அணுகுசாலையில் போய் தற்காலிக பாலம் முடிவடைகிறது. மேற்கு திசையில் புதிய தரைப்பாலத்திற்கு கருப்பாயி கோயில் தெருசாலை இணைக்கப்பட்டிருக்கிறது. கடந்த சில நாட்களாக இப்பாலத்தில் போக்குவரத்து நடைபெற்று வந்தது. நேற்றுமுதல் பழைய தரைப்பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. புதிய பாலம் கட்டுமான பணிகள் தொடங்குவதையடுத்து போக்குவரத்தை நிறுத்தி நெடுஞ்சாலைத்துறை சார்பில் அறிவிப்பு போர்டு வைக்கப்பட்டிருக்கிறது.

பசுபதிபாளையம் புதிய உயர்மட்டப்பாலம் 341.44 மீட்டர் நீளம், 7.50மீ சாலை வழியுடன் இருபுறமும் பாதசாரிகளுக்கான நடைமேடையுடன் மொத்தம் 12மீ. அகலம் கொண்ட பாலமாக அமைய வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள பழுதடைந்த பாலம் அகற்றும் பணி நிறைவு பெற்றுவிட்டது. தற்போது அந்த இடத்தில் புதிய உயர்மட்டப்பாலம் கட்டுவதற்காக தூண்கள் அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காக அஸ்திவாரம் அமைக்கும் வேலையில் ஒப்பந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இப்பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அஸ்திவாரம் அமைக்கும் பணிமுடிந்ததும் புதிய பில்லர்கள் எழுப்பும் வேலை தொடங்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

**21ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**புதுக்கோட்டை,** : புதுக்கோட்டையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 21ம் தேதி நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 21ம் தேதி காலை 10 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மனோக ரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பலதுறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை புதுகை கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய சங்க ஊழியர்களுக்கு தென்மண்டல பயிற்சி முகாம்**

**புதுக்கோட்டை,** : புதுக்கோட்டையில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கத் தில் பணியாற்றும் முன்னணி ஊழியர்களுக் கான தென்மண்டலப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இதில் மாநில துணைத் தலைவர் செல்லசாமி தலைமையில் அமைப்பு செயல்பாடு என்ற தலைப்பில் சங்கத்தின் மாநிலத் தலைவரும் எம்எல்ஏவுமான பாலகிருஷ்ணனும், செயலாளர் பெருமாள் தலைமையில் பாசன வரலாறும் தற்போதைய நீர்க் கொள்கையும் என்ற தலைப்பிலும், பொதுச் செயலாளர் சண்முகம், செயலாளர் சுந்தரமூர்த்தி தலைமையில் இந்திய விவசாயத்தில் பன்னாட்டு கம்பெனிகள் என்ற தலைப்பிலும் மற்றும் பேராசிரியர் ஆத்ரேயா ஆகியோர் பேசினர்.மாநிலத் துணைத்தலைவர் சுருளிநாதன் தலைமையில் கஸ்தூரிரெங்கன் மாதவ் காட்கில் அறிக்கை ஒரு பார்வை என்ற தலைப்பிலும், ராஜன் மற்றும் மாநிலச் செயலாளர் மதுசூதணன் தலைமையில் நிலம் கையகப்படுத்துதல் சட்டம்-2013 என்ற தலைப்பிலும், மாநில துணைத் தலைவர் முகமதலி, செயலாளர் விஜயமுருகன் ஆகியோர் தலைமையில் நிலம் தொடர்பான அளவீடுகள், ஆவணங்கள், பதிவேடுகள் ஒரு பார்வை என்ற தலைப்பிலும் மற்றும் ஓய்வு பெற்ற

டிஆர்ஓ கண்ணன் ஆகியோர் பேசினர். முகாமில் சங்க உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**திருவரங்குளத்தில் விளைபொருள் குழுவுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

**புதுக்கோட்டை,** : திருவரங்குளம் வேளாண் வணிக மையத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் சார்பில் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 9 விளைபொருள் குழுக் களுக்கான திறன்வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

புதுக்கோட்டை வேளாண் வணிக துணை இயக்குநர் அண்ணாமலை தலைமை வகித்து விளை பொருள் குழு செயலாக்க நடவடிக்கைகள், குழுக்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள், குழுக்களின் செயல்திறன் மேம்பாடு ஆகியவை பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் நபார்டு வங்கி பொதுமேலாளர் நடராஜன் மற்றும் புதுகை உதவி பொது மேலாளர் சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு விளைபொருள் குழுக்களின் சேமிப்பு முக்கியத்துவம் குறித்து பேசினார்.

இதில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை. புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் ரிச்சர்டுஜெகதீசன் கால்நடை பராமரிப்பு மற்றும் குழுக்கள் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி உயர்சந்தை விலை கிடைத்திட குழுக்களுக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் விற்பனை வசதிகளை பயன்படுத்திட கேட்டுக்கொண்டார்.

புதுக்கோட்டை விற்பனைக்குழு செயலாளர் கவுசல்யாமோகன் உயர்சந்தை விலை கிடைத்திட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத் தினை விவசாயிகள் அணு கிட கேட்டுக்கொண்டார். அட்மா மாவட்ட இணைப்பு அலுவலர் ஜெகதீஸ்வரி அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் விளைபொருள் குழுக்களுக் கான திட்ட வசதிகளையும், விதை ஆய்வா ளர் பாண்டி, விளைபொருள் குழுக்கள் விதை உற்பத்தி மற்றும் விற்பனை தொடர் பான வழிமுறைகளையும், விற்பனைக்குழு மேலாளர் செந்தில்பாண்டியன் விளைபொருள் குழுக்கள் விற்பனை கூடங்களில் பொருளீட்டுக் கடன் வசதியினை எடுத்துரைத்தனர்.

பயிற்சியில் 9 குழுக்களுக்கும், குழுக்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகளான

பொது பதிவேடு, தீர்மானப்பதிவேடு, ரொக்கப்பதிவேடு, கடன் பதிவேடு, சேமிப்பு பதிவேடு மற்றும் சுழல்நிதி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் வத்தனாகுறிச்சி, ஒடுக்கூர் கறவைமாடு விளைபொருள் குழுக்கள், முல்லைநகர், இளஞ்சாவூர், வாழக்குறிச்சி உளுந்து விளைபொருள் குழுக்கள், எம்.குளவாய்ப்பட்டி, இளஞ்சாவூர் மக்காச்சோளம் விளைபொருள் குழுக்கள், திருநாளூர், நிலக்கடலை விளைபொருள் குழு, தோப்புப்பட்டி கறவைமாடு விளைபொருள் குழு உள்ளிட்ட 75 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஆலங்குடி வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

அறந்தாங்கி வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார். உதவி வேளாண் அலுவலர்கள் ராமையா, சுப்பிரமணியன், சுப்பிரமணியன், பழனிச்சாமி, சவுந்திரபாண்டி, செல்வராஜ் ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

**உப்பனாறு கரையை மேம்படுத்த ரூ300 கோடி ஒதுக்கீடு**

**கொள்ளிடம்,** : உப்பனாறு கரையை மேம்படுத்த ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சீர்காழி எம்எல்ஏ சக்தி தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம், கொள்ளிடம் அருகே உள்ள ஆரப்பள்ளம் கிராமத்தில், இலவச மனைப்பட்டா வழங்கும் விழா நடைபெற்றது. சீர்காழி தாசில்தார் கலைச்செல்வி தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தநடராஜன் வரவேற்றார். மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சந்திரசேகரன், துணை தலைவர் ஜெயராமன் முன்னிலை வகித்தனர்.

சீர்காழி எம்.எல்.ஏ.சக்தி கலந்து கொண்டு, 114 பயனாளிகளுக்கு இலவச மனைப்பட்டாக்களை வழங்கி பேசுகையில், ஆரப்பள்ளம் கிராமத்தில், உப்பனாற்றின் இரண்டு கரைகளும் சேதமடைந்துள்ளதால், உப்புநீர், விளைநிலங்களுக்குள் புகுந்துவிடுகிறது.

இப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு வடிகாலாக இந்த உப்பனாறு திகழ்கிறது. உப்பனாற்றின் கரையை மேம்படுத்த, ஊர்பொதுமக்கள் சார்பில் ஊராட்சி மன்ற தலைவர் அளித்த கோரிக்கையை ஏற்று, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும், தமிழ்நாட்டில், டெல்டா மாவட்டங்களுக்கு, நீர்ப்பாசன

திட்டத்தை மேம்படுத்தும் வகையில், உலக வங்கி உதவியுடன் ரூ.1500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் முதற்கட்டமாக 480 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் நாகை மாவட்டத்திற்கு மட்டும் ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். ஆதிதிராவிடர் நலத் துறை தனிதாசில்தார் ராணி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மீனா, ஒன்றியக்குழு உறுப்பினர் பாலதண்டாயுதம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் ராமதாஸ், கூட்டுறவு சங்க தலைவர் வக்கீல் ரவி, அதிமுக நகர செயலாளர் சம்மந்தம் மற்றும் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.
ஊராட்சிமன்ற துணை தலைவர் குணசேகரன் நன்றி கூறினார்.

## காலிங்கராயன் வாய்க்காலில் பராமரிப்பு பணிகள் நடப்பதால் தண்ணீர் திறந்து விட வாய்ப்பு குறைவு

**ஈரோடு,** : காலிங்கராயன் வாய்க்காலில் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதால் தற்போதைக்கு தண்ணீர் திறந்து விட வாய்ப்பு குறைவு என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காலிங்கராயன் வாய்க்கால் மூலமாக 15 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசனம் பெற்று வருகிறது. பாசனப் பகுதிகளில் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றன. வாய்க்காலில் தோல் மற்றும் சாய தொழிற்சாலைகளின் கழிவு நீர் கலப்பதால் விளைநிலங்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் புகார் கூறியதை அடுத்து வாய்க்கால் முழுவதும் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு வருவதோடு வலது கரையில் பேபி கால்வாய் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. கடந்த ஆண்டில் ரூ.40 கோடி செலவில் கான்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் பேபி கால்வாய் அமைத்தல் பணி நடைபெற்றது. இந்நிலையில், இரண்டாம் கட்டமாக இந்த ஆண்டு ரூ.50 கோடி செலவில் கான்கிரீட் தளம், பேபி வாய்க்கால் கட்டும் பணி கடந்த 10 நாட்களாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், பராமரிப்பு பணிகளை காரணம் காட்டி முன்கூட்டியே தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டதால் பாசனப் பகுதிகளில் உள்ள கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்டவை கருகி வருவதாகவும், உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் காலிங்கராயன் பாசன விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தண்ணீர் திறக்காவிட்டால் தேர்தலை புறக்கணிக்க போவதாகவும்

எச்சரித்துள்ளனர். இதனிடையே வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட தற்போதைக்கு சாத்தியம் இல்லை என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறினர். இது குறித்து அதிகாரிகள் தரப்பில் கூறியதாவது: காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து வாய்க்காலின் 2வது கிலோ மீட்டர் வரை காங்கிரீட் தளம் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பராமரிப்பு பணிகளுக்காக ஒரு சில இடங்களில் வாய்க்கால் வெட்டி போடப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு இடது கரையில் காங்கிரீட் கரை கட்டுமான பணிகள் இரவு பகலாக நடைபெற்று வருகின்றது. இந்த சூழ்நிலையில் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடுவது சாத்தியமில்லாத ஒன்றாகும். ஆனாலும் விவசாயிகளின் கோரிக்கை குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அதிகாரிகள் மீது தொடர் புகார்

ஈரோடு மாவட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நீர் நிர்வாகம் செய்ய தெரிவதில்லை என்றும், காவிரி நடுவர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அதிகாரிகள் செயல்பட்டு வருவதாக தொடர்ந்து விவசாயிகள் குற்றம் சாட்டி வந்தனர். தொடக்கத்தில் கீழ்பவானி விவசாயிகள் மட்டுமே பொதுப்பணித்துறை அதிகாரிகள் மீது புகார் கூறி வந்த நிலையில், தற்போது காலிங்கராயன் பாசன விவசாயிகளும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாளவாடி மலைவாழ் விவசாயிகளுக்காக ராகி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி துவக்கம்

**ஈரோடு,** : தாளவாடி வட்டாரத்தில் உள்ள மலைப்பகுதி விவசாயிகளுக்காக ராகி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி தொடங்கப்பட்டுள்ளது. இதில் ஆயிரம் விவசாயிகள் வரை உறுப்பினர்களாக சேரலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வேளாண்மை வணிகத்துறையின் சார்பில் தாளவாடி வட்டாரத்தில் உள்ள தலமலை முதியனூர் கிராமத்தில் மலைப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ராகி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி தொடங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் சுந்தரிபிரகாஷ் தலைமையில்

நடைபெற்றது. கிராம தலைவர் ராமையா முன்னிலை வகித்தார்.
தாளவாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி, கோபி வேளாண் அலுவலர் கார்த்திகேயன், வேளாண் அலுவலர் பாரதி மற்றும் வேளாண்மை வணிக உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் ஆகியோர் சிறு தானியங்கள் குறித்தும், குறுந்தானியங்கள் சாகுபடி குறித்தும் விளக்கி கூறினர்.
விழாவில், மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) ராமசுப்பிரமணியன் பேசியதாவது: சிறு, குறு தானியங்களில் அதிக நார்ச்சத்து உள்ளதால் குறைந்த நீர் தேவையில் வளரக்கூடிய பயிர்கள் என்பதால் தானியங்களை பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும். ராகியை, ராகி மாவு, இதர பதார்த்தங்களாக செய்து விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும். புதியதாக தொடங்கப்பட்டுள்ள ராகி உழவர் உற்பத்தியாளர் கம்பெனியில் ஆயிரம் பேர் வரை உறுப்பினர்களாக சேரலாம். இவ்வாறு அவர் பேசினார்.

## கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதலுக்கு எலக்ட்ரானிக் தராசுகள்

**மஞ்சூர்,** : விவசாயிகளிடம் இருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்ய கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு எலக்ட்ரானிக் எடை தராசு வழங்கப்படுகிறது.
நீலகிரி மாவட்டத்தில் 65 ஆயிரம் விவசாயிகள் தேயிலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதை முன்னிட்டு மாவட்டத்தில் மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, மேற்குநாடு, மகாலிங்கா, கைகாட்டி, இத்தலார், கரும்பாலம், கட்டபெட்டு, எப்பநாடு, பிரான்டியர், பிதர்காடு, சாலீஸ்பரி மற்றும் பந்தலூர் ஆகிய 15 கூட்டுறவு தொழிற்சாலை இயங்கி வருகின்றன.
இத் தொழிற்சாலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினமும் கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலையை கொண்டு தொழிற்சாலைகளில் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது.
இந்நிலையில், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் விவசாயிகளிடமிருந்து பசுந்தேயிலை கொள்முதல் செய்ய பல ஆண்டுகளாக வில் தராசு

பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தராசு மூலம் பசுந்தேயிலை கொள்முதல் செய்வதில் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுவதாக விவசாயிகள் தரப்பில் புகார் கூறப்பட்டது. இதை தவிர்க்கும் நடவடிக்கையாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய எலக்ட்ரானிக் எடை தராசு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இண்ட்கோசர்வ் சேர்மன் சிவக்குமார் கூறியதாவது: மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் விவசாயிகளிடமிருந்து நாளொ ன்றுக்கு சுமார் 3 முதல் 4 லட்சம் கிலோ வரை பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது.

தற்போது பசுந்தேயிலை கொள்முதல் செய்ய கூட்டுறவு தொழிற்சாலைகளில் வில் தராசு பயன் படுத்தப்படுகிறது. இந்த வில் தராசுகளால் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுவதாக உறுப்பினர்கள் கூறிவருகின்றனர். இதை தவிர்க்க கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் எலக்ட்ரானிக் தராசுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இந்த எலக்ட்ரானிக் தராசுகள் மூலம் பசுந்தேயிலை எடையிட்டவுடன் உடனடியாக விவசாயிகளுக்கு தங்கள் விநியோகித்த பசுந்தேயிலைக்கான ரசீதுகள் உடனுக்குடன் வழங்கப்படும். மேலும் ஜி.பி.ஆர்.எஸ் தொழில்நுட்பத்துடன்  ஆன்லைன் மூலம் சம்பந்தப் பட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் உள்ள கம்யூட்டரில் விவசாயிகள் விநியோகித்த பசுந்தேயிலை குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படும்.

இதன் மூலம் பசுந்தேயிலை கொள்முதலில் உள்ள குளறுபடிகள் முற்றிலுமாக களையப்படும். இந்த எலக்ட்ரானிக் தராசுகள் 100 சதவீதம் தமிழக அரசின் மானியத்தோடு விரைவில் வழங்கப்படவுள்ளது.இவ்வாறு இன்ட்கோ சர்வ் சேர்மன் சிவக்குமார் தெரிவித்தார்.

**மங்குஸ்தான் பழ சீசன் குன்னூரில் துவக்கம்**

**குன்னூர்,** : குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையிலுள்ள பர்லியாறு, கல்லாறு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ஜாதிக்காய், துரியன், மங்குஸ்தான், எலுமிச்சம் பழம், பலாப்பழம் உள்ளிட்ட பல்வேறு வகையிலான பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் சீசனுக்கு ஏற்றார் போல் பழங்களை நேரடியாகவும்

டெண்டர் மூலம் தோட்டக்கலை துறையினர் விற்பனை செய்து வருகின்றனர். தற்போது மங்குஸ்தான் பழங்களுக்கு 2வது சீசன் துவங்கி உள்ளது.
பழங்களின் ராணி என அழைக்கப்படும் மங்குஸ்தான் ரக பழத்திற்கு சுற்றுலா பயணிகள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது. ஒரு கிலோ பழம் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. உடல் உபாதை, மலச்சிக்கல் உள்ளிட்ட நோய்களை குணப்படுத்தும் தன்மையுள்ள இந்த பழம் வெள்ளை பூண்டு போல் காட்சி அளிக்கும்.
இன்னும் 2 மாதத்திற்கு இதன் சீசன் காலம் என்பதால் பர்லியாறு, மற்றும் கல்லாறு பழப்பண்ணைகளில் காய்த்து குலுங்கும் பழத்தை சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். தாய்லாந்து, மலேசியா நாடுகளை தொடர்ந்து மிக தட்பவெப்ப நிலையிலுள்ள நீலகிரியிலும் மங்குஸ்தான் பழங்கள் காய்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

**நீரோடை தூர்வாரும் பணி மக்கள் மகிழ்ச்சி**

**பந்தலூர்,** : பந்தலூர் பகுதிகளில் மழைக் காலங்களில் பொன்னானி, தொண்டியாளம், கே.கே. நகர், கையுன்னி, வெளக்கலாடி நீரோடைகளில் தண்ணீர் அதிகரித்து குடியிருப்பு பகுதிகளிலும், விவசாய நிலங்களிலும் புகுந்து பெருமளவு பாதிக்கப்பட்டு வந்தன.
விவசாய பயிர்களான வாழை, இஞ்சி, மரவள்ளி போன்ற பயிர்களும் சேதமடைந்து விவசாயிகள் பாதி க்கப்பட்டனர். இதனால் இதுபோன்ற நீரோடைகளை தூர்வார வேண் டுமென பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.
அதன் விளைவாக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக நீரோடை தூர் வாரும் பணி பொன்னானி, கையுன்னி, வெளக்கலாடி நீரோடைகளில் நடைபெற்று வருகிறது. சாலியார் நீர்பிடிப்பு பகுதிக்கு உட்பட்ட வெளக்கலாடி நீரோடை ரூ.10 லட்சம் செலவில் மூன்று கிலோமீட்டர் தூரம் தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
இப்பணி வேகமாக நடைபெறுவதால் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வேளாண் பொறியியல்துறைக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற நீரோடை களை தூர்வார நிதி ஒதுக்கீடு செய்து மழைக்காலம் நெருங்குவதற்குள் நீரோடைகளை தூர்வார நடவடிக்கை எடுத்தால் மழைக்காலங்களில் குடியிருப்பு பகுதிகளிலும் விவசாய பகுதிகளிலும் நீர் புகாமல் பாதுகாக்கலாம் என பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஜனவரி மாதத்தில் ரப்பர் இறக்குமதி 20% குறைந்தது**



கொச்சி,

ஜனவரி மாதத்தில் இயற்கை ரப்பர் இறக்குமதி 20 சதவீதம் குறைந்து 19,696 டன் என்ற அளவில் உள்ளது. அதே சமயம் நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல்–ஜனவரி) ரப்பர் இறக்குமதி 41 சதவீதம் அதிகரித்து வரலாறு காணாத அளவிற்கு 2.80 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. கடந்த முழு நிதி ஆண்டில் (2012–13) இறக்குமதி 2.17 லட்சம் டன்னாக இருந்தது.டிசம்பர் மாத இறுதியிலிருந்து ரப்பர் விற்பனை விறுவிறுப்படைந்துள்ளது. ஜனவரி மாதத்தில் விற்பனை 8 சதவீதம் உயர்ந்து 82 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது. அதே சமயம் உற்பத்தி 8 சதவீதம் சரிவடைந்து 93 ஆயிரம் டன்னாக குறைந்துள்ளது. ஜனவரி மாத இறுதி நிலவரப்படி ரப்பர் கையிருப்பு 2.72 லட்சம் டன்னாக

உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 8 சதவீதம் குறைவாகும்.

**உதவி வேளாண்மை அலுவலர் காலி பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்: தமிழக அரசு உத்தரவு**




சென்னை,

உதவி வேளாண்மை அலுவலர் காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வின் மூலம் நிரப்பப்படும் என்று தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

<u>417 இடங்கள்</u>

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச்செயலாளர் சந்தீப் சக்சேனா வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழக அரசுக்கு வேளாண்மை ஆணையர் கடிதம் எழுதினார். அதில், உதவி வேளாண்மை அலுவலர் காலிப்பணியிடம் 2011–12–ம் ஆண்டிற்கு 417 என்று மதிப்பீடு செய்து அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நேரடி நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது.

<u>போட்டித்தேர்வு அவசியம்</u>

2009 மற்றும் 2011–ம் ஆண்டுகளில் அந்த பணியிடங்கள் வேலைவாய்ப்பகம் மூலம் நேரடியாக நிரப்பப்பட்டது. தற்போது திறமையான, மேம்பட்ட மற்றும் இளையோருக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில், போட்டித்தேர்வு மூலம் தமிழ்நாடு

அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் மேற்கொண்டால் சிறப்பாக அமையும்.மேலும் மாநில முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான தகுதியானவர்கள் அனைவரும் பங்கேற்கும் விதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு மேற்கொள்வது உகந்ததாக இருக்கும். இந்த உதவி வேளாண்மை அலுவலர் பணிநியமனத்தினை தமிழ்நாடு தேர்வாணையத்தின் எல்லைக்குள் கொண்டு வந்து, 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை நிரப்பிட ஆணை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

<u>தேர்வாணையம் இசைவு</u>

இதுகுறித்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையத்தின் ஆலோசனை கோரப்பட்டது. இந்த பணியிடங்களை தேர்வாணையத்தின் எல்லைக்குள் கொண்டுவந்து, 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்ப இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.வேளாண்மை ஆணையரின் கருத்தை அரசு கவனமுடன் பரிசீலித்து, அந்த பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பலாம் என முடிவு செய்து அரசாணை வெளியிடப்படுகிறது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக, தமிழ்நாடு அரசு பணி விதிகளில் திருத்தம் கொண்டு வருவதற்கான அறிவிப்பாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தள்ளிவைப்பு கலெக்டர் தகவல்**



காஞ்சீபுரம்,

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:–

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நாளை(வெள்ளிக்கிழமை) நடைபெறுவதாக இருந்தது. ஆனால் நிர்வாக காரணத்தினால் இந்த கூட்டம் வேறொரு தேதிக்கு தள்ளி வைக்கப்படுகிறது. நாள், தேதி பின்னர் தெரிவிக்கப்படும்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனைதிறன் பயிற்சி**

காஞ்சீபுரம்**,**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் காஞ்சீபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையம் இணைந்து நடத்தும் சில்லரை விற்பனையாளர்களுக்கான விற்பனைத்திறன் பயிற்சி காஞ்சீபுரம் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் நடந்தது.

பயிற்சியை காஞ்சீபுரம் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் அ.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பயிற்சியாளர்களுக்கு கையேடுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் துணைப்பதிவாளர்கள் நா.சு.மணி, பொ.ஸ்ரீதரன், ர.சிவக்குமார், மேலாண்மை நிலைய துணை முதல்வர் புவனேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். தொடக்கத்தில் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குனர் கா.பாபு வரவேற்றார். முடிவில் மேலாண்மை நிலைய கூட்டுறவு சார்பதிவாளர் புனிதன் நன்றி கூறினார்.

**4 இடங்களில் உலர்தீவன விற்பனை மையம் கலெக்டர் தொடங்கிவைத்தார்**



திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 இடங் களில் கால்நடைகளுக் கான உலர்தீவன விற் பனை மையத்தை கலெக் டர் அ.ஞானசேகரன் தொடங்கி வைத்தார்.

உலர்தீவன விற்பனை மையம்

கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களில் தீவன பற்றாக்குறை ஏற்பாடுதல், சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் கால் நடைகளுக்கு தீவனம் அளிக்க முடியாமல் பால் மற்றும் இறைச்சி உற்பத்தி குறைவதை போக்கவும், தீவன பற்றாக் குறையினால் கால்நடைகளை விற்பனை செய்வதை தடுத்து, பாதுகாக்கவும் மானிய விலையில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் உலர்தீவனம் (வைக்கோல்) விற்பனை மையங்களை தொடங்க முதல் -அமைச்சர் ஜெயலலிதா உத் தரவிட்டுள்ளார்.

அதன் பேரில் திருவண்ணா மலை மாவட்டத்தில் திரு வண்ணாமலை, போளூர், தண்டரை, கொற்கை ஆகிய இடங்களில் உலர்தீவன (வைக் கோல்) விற்பனை மையங்க ளை கலெக்டர் அ.ஞான சேகரன் தொடங்கி வைத்து பேசினார்.

5 கால்நடைகளுக்கு

அப்போது திருவண்ணா மலை மாவட்டத்தில் இன்று தொடங்கப்பட்டுள்ள கால் நடைகளுக்கான உலர்தீவன (வைக்கோல்) விற்பனை மையங்கள் மூலமாக ஒரு மையத்திற்கு ரூ.9,77,500 வீதம் மொத்தம் 4 மையங்களுக்கு ரூ. 39,10,000 மதிப்பிலான உலர் தீவனம் (வைக்கோல்) வாங்கி இருப்பு வைத்து, மானிய விலையில் ஒரு கிலோ வைக் கோல் ரூ.2 வீதம் விற்பனை செய்யப்படவுள்ளது.

திருவண்ணாமலை மாவட் டத்தில் இன்று முதல் தண் டரை, கொற்கை, திருவண் ணாமலை, போளூர், ஆகிய இடங்களில் உள்ள உலர்தீவன கிடங்கின் மூலம் கால்நடை வளர்ப்போருக்கு ஒரு மாட் டிற்கு 3 கிலோ வீதம் 7 நாட்க ளுக்கு 21 கிலோ உலர் தீவன (வைக்கோல்) வழங்கப்படும் அதிக பட்சமாக ஒரு பயனா ளிக்கு 5 கால்நடைகளுக்கு உலர் தீவனம் வழங்கப்படும்.

பெயர் பதிவு

கால்நடை வளர்ப்போர் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் தங்கள் பெயர் களை பதிவு செய்து, அதற்கான தீவன அட்டையை பெற்றுக் கொண்டு உலர்தீவன

(வைக் கோல்) கிடங்கில் இருந்து உலர் தீவனத்தை பெற்றுக்கொள் ளாம் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் ராஜேந்திரன், செய்யாறு உதவி கலெக்டர் சாந்தா, உதவி இயக்குநர் கே.மணி, ஒன்றிய குழுத்தலைவர் விமலா மகேந் திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பூங்காவனம் அரங்கநாதன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் கிருஷ்ணன், வேளா ண் உற்பத்திக்குழு உறுப்பினர் மகேந்திரன், கால்நடை மருத் துவர்கள் செல்வராஜ் நாரா யணன், வெங்கட்ராகவன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டேரில் கோடை சாகுபடி கலெக்டர் தகவல்**



திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டேர் கோடை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக கலெக்டர் நடராசன் கூறினார்.

<u>கரைசல் தெளிப்பு நிகழ்ச்சி</u>

திருவாரூர் மாவட்டம் கீராளத்தூரில் வேளாண்மை துறை சார்பில் பயறு வகை பயிர்களில் ஒட்டுமொத்த கரைசல் தெளித்தல் பணி தொடக்க நிகழ்ச்சி நடை பெற்றது. நிகழ்ச்சியில் திரு வாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் கலந்து கொண்டு கரைசல் தெளித்தல் பணிகளை தொடங்கி வைத்து பேசி னார். அப்போது அவர் கூறிய தாவது:-

உணவு உற்பத்தி இயக்கம்

திருவாரூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தி இயக்கத்தின் கீழ் நடப்பு கோடை பருவத்தில் நெல் 10 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது. பயறுவகை பயிர்களை 1 லட்சத்து 8 ஆயிரத்து 700 எக்டேரில் சாகுபடி செய்யவும் இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள் ளது. இதில் பயறு வகை பயிர்கள் இதுவரை ஒரு லட்சத்து ஆயிரத்து 807 எக்டேரில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. நெல் நாற்று விடும் பணி தொடங்க உள்ளது.மகசூலை அதிகரிக்கும் பொருட்டு இலை வழி டி.ஏ.பி. உரம் தெளித்தல் முறையை பின்பற்ற திட்டமிடப் பட்டுள்ளது. இந்த திட்டத் தின்கீழ் பயன் பெறவும், தண்ணீர் எடுத்துச் செல்லும் கருவி, தெளிப்பு நீர்ப்பாசன கருவி, மழை நீர் கருவி ஆகிய வற்றை 50 சதவீத மானியத்தில் பெறவும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ள வேண்டும்.

மானியங்கள்

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயிர் பாது காப்பு மருந்துகள், கைத் தெளிப்பான் கருவிகள், நுண்சத்து பொருட்கள் 50 சதவீத மானியத்தில் விவசா யிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆயில் என்ஜின் கருவி வாங்க ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. தார் பாய்கள் 50 சதவீத மானியத்தில் வினியோகம் செய்யப் படு கின்றன. இந்த மானிய திட்டங் களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு கலெக்டர் கூறினார்.நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் தன சேகரன், துணை இயக்குனர் மயில்வாகணன், உதவி இயக் குனர் சிவகுமார், திருத்து றைப்பூண்டி ஒன்றிய குழு தலைவர் வேதநாயகி சிங்காரவேல் மற்றும் விவசா யிகள் கலந்து கொண்டனர்.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்**



பெரம்பலூரில் விவசாயிகளுக் கான இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் இயற்கை விஞ்ஞானிநம்மாழ்வார் படத்திறப்பு நிகழ்ச்சி நடந்தது. நிலைத்த வாழ்வாதாரத்திற் கான கூட்டு செயல்பாடு மற்றும் சமூக செயல்பாட்டு இயக்கம் சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட அமைப் பாளர் சாமிநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப் பாளர் முகமது உசேன் வரவேற்றார். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் படத்தை இயற்கை விவசாயிகள் சங்கத்தின் அமைப்பாளர் ஜெயராமன் திறந்துவைத்து இயற்கை விவசாயம் எதிர் நோக்கும் சவால்களும், சாதனைகளும் என்றதலைப் பில் பேசினார். ஓய்வுபெற்ற வேளாண்மை துணை இயக்குனர் பழனி பருவநிலை மாற்றத்தில் விவசாய உத்திகள்'என்றதலைப்பிலும், நம்மாழ்வார் ஓர் இயற்கை விவசாய விதை என்ற தலைப்பில் லிசா கூட்டமைப் பின் அமைப்பாளர் ஆசி குவிண்டால் ஆகியேரும் பேசினார்கள். தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர்.ராஜா சிதம்பரம் கருத்துரை ஆற்றி னார். நகர்மன்றத் துணைத் தலைவர் ராமச்சந்திரன் வாழ்த்திப்பேசினார். சமூக செயல்பாட்டு இயக்கத்தின் மாநில அமைப்பாளர் சிவப்பிரகாசம் தொகுத்து அளித்தார். முடிவில்.சம்பத் நன்றி கூறினார்.

**நிலக்கோட்டையில் விவசாயிகளுக்கு இலவச உபகரணங்கள் வழங்கும் விழா**



நிலக்கோட்டை,

திண்டுககல் மாவட்டம் நிலககோட்டை அருகே கோட்டுர், நுத்துலாபுரம் உள்பட 10 ஊராட்சிகளை சேர்ந்த ஏழை விவசாய தொழிலாளர்கள் 325 பேருககு மாவட்ட ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தில் இலவச இரும்பு தட்டு மற்றும் மண்வெட்டிகள் வழங்கும் விழா நடந்தது.

விழாவிற்கு ஒன்றியக்குழு தலைவர் யாகப்பன், ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் தண்டபாணி ஆகியோர் தலைமை தாங்கினர். நிலககோட்டை பேரூராட்சி

தலைவர் சேகர், நகர செயலாளர் உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி தலைவர் ஜெயராஜ் வரவேற்றார். மாவட்ட கவுன்சிலர்கள் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**சிறந்த 10 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.6¾ லட்சம் ரொக்கப்பரிசு ஆவின் தலைவர் வழங்கினார்**



மதுரை,

கடந்த ஆண்டு அதிக பால் வழங்கிய சிறந்த 10 பால் கூட்டுறவு சங்கத்திற்கு ரொக்க பரிசை ஆவின் தலைவர் வழங்கினார்.

<u>சிறந்த கூட்டுறவு சங்கம்</u>

ஆவினுக்கு அதிக பால் வழங்கும் கூட்டுறவு சங்கத்திற்கு ரொக்க பரிசு வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்தார். அதன்படி கடந்த 2012-13ம் ஆண்டில் அதிக பால் வழங்கிய மதுரை, தேனி மவாட்டங்களை சேர்ந்த சிறந்த 10 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் பாலின் அளவு, தரம், கொழுப்புச்சத்து, கலப்படமின்மை என பலவற்றையும் ஆய்வு செய்து சிறந்த சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதில் 4 நட்சத்திர அந்தஸ்டன், மதுரை ஒன்றியத்தின் சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமாக, தும்மைப்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் தேர்வு முதலாவதாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த சங்கத்திற்கு ரூ.25 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. 2-வது பரிசு கோட்டநத்தம்பட்டி சங்கத்திற்கு ரூ.15 ஆயிரமும், 3-ம் பரிசு முத்தாலம்மன்பாறை சங்கத்திற்கு ரூ.10 ஆயிரமும்

வழங்கப்பட்டன. மீதமுள்ள 7 சங்கத்திற்கு சிறப்பு பரிசாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டது.

ரூ.6.85 லட்சம்

இந்த ரொக்க பரிசு வழங்கும் விழா நேற்று ஆவினில் நடந்தது. இதில் ஆவின் தலைவர் கே.சி.தங்கராஜன் கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்டுள்ள சங்கத்திற்கு மொத்தம் ரூ.6.85 லட்சம் பரிசுத் தொகையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பொதுமேலாளர் கிருஷ்டி, ஆவின் துணைத்தலைவர் செல்வம், இயக்குநர்கள் தளபதி மாரியப்பன், தனராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கால்நடைகளுக்கான உலர் தீவன விற்பனை மையம் கலெக்டர் தொடங்கி வைத்தார்



உலர் தீவன விற்பனை மையத்தை கலெக்டர் சுப்பிரமணியன் தொடங்கி வைத்தபோது எடுத்த படம்.

உசிலம்பட்டி,

உசிலம்பட்டியில் கால்நடைகளுக்கான உலர் தீவன விற்பனை மையத்தை மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

தொடர் வறட்சி

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததை தொடர்ந்து விவசாயம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு அதிகரித்தது. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கால்நடைகளுக்கு உரிய தீவனங்களை அதிக விலை கொடுத்து வாங்கமுடியாமல் மிகவும் அவதிப்பட்டு வந்தனர்.

இதனை கருத்தில் கொண்ட தமிழக அரசு கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் நோக்குடன் கால்நடைகளுக்கு தேவையான தீவனத்தை மானிய விலையில் வழங்க முடிவு செய்தது.

உலர் தீவன மையம்

இதன்படி மதுரை மாவட்டத்தில் முதலில் உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூரை அடுத்த வெள்ளலு£ர் ஆகிய இடங்களில் கால்நடைகளுக்கு உலர் தீவன விற்பனை மையம் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. உசிலம்பட்டியில் கால்நடை மருத்துவமனையில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மையத்தை மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இங்கு தேவையான தீவனங்கள் செல்லம்பட்டி அக்ரோ கூட்டுறவு மையத்தின் வழியாக வழங்கப்படுகிறது. அவற்றை பயனாளிகளுக்கு வழங்கி மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் பேசுமபோது கூறியதாவது:-

தமிழக அரசு மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியை கருத்தில் கொண்டு கால்நடை வளர்ப்பவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக மானிய விலையில் உலர் தீவனம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. ஒரு கிலோ 2 ரூபாய் வீதம் ஒவ்வொரு மாட்டிற்கும் நாள் ஒன்றுகிற்கு 3 கிலோ வழங்கப்பட உள்ளது. இதனை கால்நடை வளர்ப்பவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சமுதாய வளைகாப்பு விழா

பின்னர் உசிலம்பட்டி அருகே உள்ள தொட்டப்பநாயக்கனு£ரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட திட்ட அலுவலர் வசந்தி தலைமை தாங்கினார். குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கோப்பெருந்தேவி வரவேற்றார். இதில் கலெக்டர் சுப்பிரமணியன் கலந்து கொண்டு 85 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு தாம்பூலத்தை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து நடைபெற்ற மனுநீதி நாள் முகாமிற்கு கலெக்டர் தலைமை தாங்கினார். உசிலம்பட்டி வருவாய் கோட்டாச்சியர் துரைப்பாண்டியன் வரவேற்றுப் பேசினார். ஊராட்சி மன்றத் தலைவி பாண்டிச்செல்வி முன்னிலை வகித்தார். இதில் நிலப் பட்டா மாறுதல், வீட்டு மனை பட்டா மாறுதல், குடும்ப அட்டை மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்குதல் உள்பட 84 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை

உசிலம்பட்டி தாசில்தார் கஜேந்திரன், வருவாய் ஆய்வாளர் தனுஷ்கோடி ஆகியோர் செய்திருந்தனர்.

**காவல்கிணறு காய்கறி மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.2க்கு விற்பனை**

பணகுடி,

காவல்கிணறு காமராஜர் காய்கனி மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக காய்கறி விலைகள் குறைந்து வருகிறது. ஒரு கிலோ ரூ.40–க்கு விற்ற வெண்டைக்காய் ரூ.18–க்கும், ரூ.30–க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.20–க்கும், ரூ.20–க்கு விற்பனையான வெள்ளரிக்காய் ரூ.8–க்கும் விற்பனையாகிறது.

கடந்த வாரம் கிலோ ரூ.5–க்கு விற்ற தக்காளி நேற்று ரூ.2–க்கு விற்பனையானது. தக்காளி பழங்கள் வாங்க வியாபாரிகள் வராததால் ஒவ்வொரு கமிஷன் கடையிலும் நூற்றுக்கணக்கான பிளாஸ்டிக் கூடைகளில் தக்காளி பழங்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதையடுத்து விவசாயிகள் தங்களது தோட்டங்களில் உள்ள தக்காளி பழங்களை பறிக்காமல் செடியில் போட்டுவிட்டனர். இதனால் பழுத்த தக்காளி பழங்களை பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து கொத்திச் சென்றன.